SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams : "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone : NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

75-ம் புத்தகம் 10-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு பங்குனிமாசம் 9-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## தூதுசென்ற சூசைமாதவன்

[ "தேம்பாவணியை" ஆதாரமாகக்கொண்டு எழுதியது. ]

தமது துன்பங்களால் உலகத்தவர் இன்பமடையச்செய்யவந்த தேவகுமாரன் தம்முடையதிருக்கைத்தாதையாகிய சூசையப்பர் பொறுமையின்பயனுகியமோட்ச உரிமையைப் பெறவேண்டி அவருக்குநோய்வரத் திருவுளமானுர். சூசையப்பருக்கு 52 வயசு நடக்கும்போது உடலில் நரைதிரை கண்டு, நரம்புகள் தளர்ச்சி கொண்டு வாதநோய் உண்டாயிற்று. அதனுல் அவர் கையால் யாதாமோர் வேலையுஞ் செய்யவோ, காலால் ஓரடிதானும் எடுத்துவைக்கவோ இயலாதவராய், உடல் வாட்டமுற்றும் ஊக்கம் என்றுமே வாட்டமுருமல் பொறுமையுடன் சகலதுன்பங்களையும் அனுபவித்துச் சந்தோஷமாய் ஆண்டவரைத் தோத்திரித்துக்கொண்டிருந்தார். அவர் நோயுற்றிருந்தபோது எவ்வித அகமகிழ்ச்சியுடன் ஆண்டவரைத் துதிதுக்கொண்டிருந்தார் என்பதை வீரமாமுனிவர் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்ருர்.

போர்முகத்(து) அஞ்சாவீரப்
புழைக்கையோ புணரிமோத
நீர்முகத்(து) அசையாக்குன்ருே
நெடும்பிணி முகத்(து) எஞ்சா தான்
கார்முகத்(து) அலர்ந்தமுல்லைக்
காவெனத் திரண்டபன்னேய்
சேர்முகத்(து) தலர்ந்துதேவ
திருவுளந் துதித்தல்விள்ளான்

அதாவது :— கொடிய போர் முகத்திலே அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரயானைதானே? கடற்றிரை பொங்கியெழுந்து மோது முகத்திலே அசையாது நிறுவி நிற்கும் வயிரமலைதானே?என்று சொல்லும்படியாக நெடுநாள் வந்து நீங்காதுவருத்தும் பிணி முகத்திலே சூசைமாமுனிவரும் மனம் கிஞ்சித்தும் தளராதவராய், இடிக்கின்ற மேகத்தின் முகத்திலே மலருகின்ற முல்லைச் சோலைபோலத் திரண்டுஒன்ருகச்சேர்ந்த பலநோய்முகத்திலே தானும் அகமலர்ந்து இதுவே தேவதிருவுளமென நினைந்து அதை ஓயாமல்துதித்துநின்ருர்.

இவ்விதம் சூசையப்பர் தமக்கு மிகுந்த வேதனையைச் செய்த துன்பத்தை இன்பமாகத் தாங்கிக்கொண்டு எத்தாலும் நிகராகாத மாட்சிமைஅடைந்து விளங்கினுர். இவ்வாறு எட்டுவருடகாலம் வாதநோயால் அவர் உடல்தளர்ந்தும் உள்ளந்தளராதவராய்ப் பேரின்பமடைந்தார்போல் பெருமகிழ்ச்சியுடன் இருந்துவருங்கால், ஓர்நாள் அநேகதேவதூதர் ஆகாயத்தினின்றும் இறங்கிவந்து அவரைச் சூழ்ந்துகொண்டு ஒன்பது நாள் வரையில் மகரயாழ்முதல் சகலவீணைகளையும் கரத்தேந்தியவர்களாய்த் தேவதோத்திர மாலைகளைப் பாடிக்கொண்டு வந்தார்கள். பத்தாவது நாள் பிதாவாகியசருவேசுரன் அவர் மேல் தமக்குள்ள மிகுந்த அன்பிற்கோர் அடையாளமாக அவரது மனக்கண்ணுக்குத் தமது தெய்வீகமகிமை விளங்கும்படியாக ஓர்விசேஷவரம் அருளி:—

உன்னுயிர் தன்னிலும்
ஓம்பித் தாய்மகன்
இன்னுயிர் காத்தனை
இனிப் பயன்கொளீ
மன்னுயிர் பெறுங்கதி
வானில் வந்துறி
நின்னுயிர் வாழ்தலே
நீதி யாமரோ

அதாவது :— சூசையே! உலகத்தை இரட்சிக்க அவதரித்திருக்கும் நமது நேச குமாரனையும், அவரைப்பெற்ற திருமாதாவையும் உனதுஉயிரினும் இனிதாகப் பாதுகாத்துவந்தாய். அதனுல் இனி அதற்குரிய பலனைப்பெற்று நல்லோருக்குக் குறித்த மேலான கதியாகிய மோட்சத்தில் வந்து உன்னுயிர் வாழ்தலே நீதியாகும்.

அங்ஙனம் இது நீதியாயினும் அருமையோடு நீ வளர்த்த தேவகுமாரன் தாய்அன்பிலும் மிக்க அன்போடு மனுமக்களை இரட்சிப்பதற்காகத் தனது உயிர் தந்து பலியானுல் அல்லாது வான் வீட்டில் எவரும் சேரமாட்டார். ஆதலின் உனது உயிரும் உடலைவிட்டு நீங்கியபோதிலும் அதுவரையில் பிதாக்களின் ஸ்தலத்தையே அடைந்திருக்கும். ஆனுல், நீ உயிர்நீங்கியபின்னர் செய்யவேண்டியது ஒன்றினைக் கேள்.

ஈடடைந் தருந்தவம்
இயன்ற முந்தையார்
நீடடைந் துறையுமென்
தயைநிழற்றிய
நாடடைந் திறைபிறந்
தளிக்கு நாளுற்றி
வீடடைந் துவப்பரென்
றருள் விளம்புவாய்

அதாவது :— தாங்கள் ஆற்றி முடித்த அருந்தவத்தால் பெருமை அடைந்த அப்பிதாக்கள் நெடுநாளாக நமது தயையாகிய நிழலில் இருக்கும் அந்த ஸ்தலத்துக்கு நீ நம்முடைய தூதுவனுகச்சென்று மனுமகனுக அவதரித்திருக்கும் தேவகுமாரன் தமது உயிரைப் பலியாகத்தந்து மனிதரை இரட்சிக்குங்காலம் சமீபித்துவிட்டது. இனி அவர்கள் மோட்சவீட்டை அடைந்து இன்புற்று வாழ்வார்கள் என்னும் தயையின் செய்தியை உரைப்பாய். (தொடரும்)

பரிசுத்தவருடச் செபயுத்தத்தின்பேரில்

திரிகோணமலை மேற்றிராணியாரின்

## தபசுகால ஆயர் நிருபம்.

(முன்தொடர்ச்சி)

### ஓர் செபயுத்தம்

உலகத்தின் துக்கத்துக்குரிய நிலைபரத்தை எவரைப்பார்க்கிலும் நன்ருய் அறிந்தவராகிய பரிசுத்தபிதா கிறீஸ்துநாதருக்காகப் பரிசுத்தவருடத்தில் இந்த நிலைபரத்தை மாற்றும்நோக்கமாய்ஓர் வீரத்தனமான முயற்சி செய்யும்படி தமது மக்களை அழைக்கின்றனர். ஓர் பொதுவானமுயற்சி போதாது. அது ஓர் விசேஷமுயற்சியாய் இருக்க வேண்டும். பாவிகளை மனந்திருப்பவும், வேதகலாபனையில் வருந்துகிறவர்களை உறுதிப்படுத்தவும், தமது மக்களின் விசுவாச உற்சாகத்தை அதிகரிக்கச் செய்யவும் உலகமெங்கும்பரவிய ஓர்செபதவ யுத்தத்தைத் தொடங்கிநடத்த விரும்புகின்றனர். எப்பக்கத்திலும் பரிசுத்த பிதாவின் அழைப்புக்கு உற்சாகத்தோடு காதுகொடுக்கின்றனர். கிறீஸ்துநாதரின் பிரதிநிதியாகிய பாப்பரசர்மட்டில்எப்பொழுதும்வைத்திருக்கும் அபிமானத்தில்சிறந்த மரியாயின் மக்கள்சபை தனதுஅங்கத்தவர்களை அவரின் அழைப்புக்குச் செவிசாய்க்கும்படி கேட்கின்றது. செபஅப்போஸ்தலசபையின் மத்தியபகுதி பரிசுத்த பிதாவின்விருப்பத்தை நிறைவேற்ற ஓர்முறையான காரிய நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. கத்தோலிக்க சேவாசங்கத்தின் பலசிறுகிளைகள் பரிசுத்தவருடத்தைப் பாப்பரசர்அருளியசெபத்தில் சொல்லியவண்ணம் பெரியமன்னிப்பையும், மனந்திரும்புதலையும் கொண்டஓர்வருடமாக்க முயற்சி செய்கின்றது.

ஓர்விசேஷவகையிலே பரிசுத்தபிதா மேற்றிராணிமாரின் ஆதரவைப் பின்வருமாறுகேட்கின்றனர். "உலகத்திலுள்ள மேற்றிராணிமார் தங்கள்குருமாரின்உதவியோடு தங்கள் பொறுப்பில்இருக்கும் மந்தைகளுக்கு யுபிலிவருடத்தைப்பற்றிய காரியங்களைக் கவனமாய்க் கற்பிக்கும்படிவெகுவாய்விரும்புகின்ருேம். விசுவாசிகளைத் தங்களால்இயன்றளவு இதில் பங்குபற்றும்படி குருமார்அவர்களை உற்சாகப்படுத்துவார்களாக. விசுவாசிகள் உரோமைநகரத்துக்குப் போனுலுஞ்சரி, போகாமல் தங்கள் சொந்தநாட்டில் இருந்தாலுஞ்சரி, அவர்கள் சருவேசுரனுக்கு உருக்கமான செபங்களை ஒப்புக்கொடுத்து, தவக்கிரிகைகளையும், பிறர்சிநேகக்கிரிகைகளையும் பெருக்கித் தங்களால்இயன்றளவு நாம்பரிசுத்தவருடத்தின் கருத்துகளாக நியமித்தவைகளை அடையும்படி உதவிபுரியவேண்டும்."

இந்தப்பிரகாரம் உலகம்எங்கும்உள்ள மேற்றிராணிமார் பாப்பரசரின்அழைப்புக்கு முழுமனதோடு காதுகொடுக்கும்படி தங்கள் மந்தைகளை உற்சாகப்படுத்துகின்றனர். நாமும் இந்த ஆயர்நிருபத்தில் நமதுமேற்றிராசனத்திலுள்ளகுருமாரையும், விசுவாசிகளையும் இந்தச்செபயுத்தத்தில் சேரும்படியும், சேர்ந்துபுகழ்ச்சியோடு முயற்சி செய்யும்படியும் தூண்டுதற்கு விரும்புகின்ருேம்.

முதன்முதல் நாம் மேற்றிராசனத்திலுள்ள குருமாரிடத்திலும், துறவிகள் இடத்திலும் இதைக்கேட்டுக்கொள்ளுகிருேம். வண. சுவாமிமார்களே, சகோதரர்களே, சகோதரிகளே, இந்தச்செபயுத்தத்தின் நன்முடிவு உங்களாலேதான் ஆகவேண்டியது. சருவேசுரனுல் உங்களுக்கு அருளப்பட்ட மேலான அழைத்

( தொடர்ச்சி 8-ம்பக்கம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## சவேரியாரின் திருமேனி

இந்திய மேற்றிராணிமார்களின் தேசியபூரண சங்கத்துக்குத் தலைமை வகிக்குமாறு பாப்பரசரின் பிரதிநிதியாக நியமனம்பெற்றுவந்த கருதினல் கில்ரோய்ஆண்டவர் கோவைநகரைத் தரிசித்தபோது, அவரைக் கணிசப்படுத்துமாறு, அங்கு பொம்யேசுஎனும் யேசுசபைக்கோவிலில் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்படுகின்ற சிந்துதேசஅப்போஸ்தலராம் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் அழியாத்திருமேனியானது, அவருக்குச் சென்றதைமாதம் 22-ந் திகதியன்று அந்தரங்கமாகக் காண்பிக்கப்படலாயிற்று. அவருடன் அதைக் கண்டுகொள்ளுமாறு திருச்சபை அதிகாரிகளும், குருமாருமே அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால், இதுசெய்தி ஏதோஒருவிதமாய் வெளியில் பரந்துவிடவே பதினையாயிரம் சனங்கள்வரையில் இந்த அந்தரங்க திருமேனிக்காட்சியைக் கண்டுகொள்ளச் சென்றுகூடிவிட்டார்கள். அதனால் பொம்யேசுவின் திருக்ஷேத்திரமானது அவர்களாலே நிறைந்துதேங்கிவிடவே, எவரும் முன்பின் அசையமுடியாமல் போய்விட்டது. தங்கள் அர்ச்சியசிஷ்டரும், அப்போஸ்தலருமானவரின் திருமேனியைத் தரிசிக்கவேண்டும்; அவர்மட்டிலே தங்கள்இருதயங்களில் என்றைக்கும் சுவாலித்தெழும் அன்பைக் காண்பிக்கவேண்டுமென்ற ஏக சிந்தனையுடையவர்களாய் அவர்கள் எல்லோருமே காணப்பட்டார்கள். நான்கு நூற்றாண்டுகளாக அழிவைக்காணாது சருவேசுரனால் அற்புதமாகக்காப்பாற்றப்பட்டுவரும் அர்ச். சவேரியாரின் திருமேனியானது இந்தியாவின் மதித்தற்கரிய பொக்ஷம்போல் இன்றைக்கும் இருந்துவருகின்றது. தமதுபிரிய மக்களிடையே அவர் இன்னுமே சீவந்தராய் இருப்பார்போல் காட்சியளித்துவருகின்றார்.

## மகாராணிக்குச் சந்மானம்

சமீபத்திலே சென்னைத் தேசாதிபதியான பவநகர் மகாராஜாஅவர்கள் தூத்துக்குடிக்கு விஜயம்செய்தபோது, அங்கு ஆரோக்கியபுரத்திலுள்ள அர்ச். சூசையப்பரின் குஷ்டரோகர்சாலையையும் சென்றமாசிமாதம் 21-ந் திகதி தரிசிக்கலாயினர். மகாராஜாஅவர்கள் சென்னை உணவுமந்திரியார் திரு. ஜே. எல். பி. ரோச் விக்ரோறியாஅவர்கள் சமேதராய் அங்குபோய்ச் சேர்ந்ததும், குஷ்டரோகர்சாலையை அடியிட்டவரும், அதன்பரிபாலகருமான தூத்துக்குடி மேற்றிராணியாண்டவர் அவரை வரவேற்று, சிங்காரமுற்றுவிளங்கிய உயர்மேடையில் அமரச்செய்து, அந்த ஸ்தாபனத்தின்பேரால் அவருக்கு மாலைசூட்டினர். அத்தருணம் அதன் விசாரணைக்குருவர் வண. யோசெவ் ரோச் சுவாமியவர்கள் அங்கு அவர் அருளிய தரிசனைக்காக நன்றிபாராட்டியும், ஒன்றரைலட்சம் ரூபாவுக்குமேல் மிஷனுக்குச் செலவுபிடித்திருக்கும் அதன் வேலைபற்றிய சுருக்கமான வரலாற்றைப்பொழிப்பாக எடுத்துக்காட்டியும் வந்தனோபசாரப்பத்திரம் ஒன்று படித்துக்கொடுத்தார். அந்த ஸ்தாபனத்தைத் தரிசித்ததையிட்டுத் தமக்குண்டான பெருஞ்சந்தோஷத்தை மகாராஜா தெரிவித்து, தமது சொந்தநன்கொடையாக 500 ரூபா சந்மானிப்பதாகத் தெரிவித்தனர். அத்தருணம் மேற்றிராணியாண்டவர் முன்சென்று "பாத்திமா மகாராணி பவநகர் இராணிக்குச் சகலத்திலும் அனுகூலமாயிருப்பார்" என்று சொல்லிக்கொண்டே மகாராணிக்குக் கொடுக்கும்படியாய்ப் பாத்திமாநாயகியின் அதிகவிலைபெற்றதும், அழகு பொருந்தியதுமான திருச்சுரூபம் ஒன்றை மகாராஜாவிடம் கையளித்து எல்லோரையும் பிரமிக்கச்செய்துவிடலாயினர். தாம் எதிர்பாராத அந்தச் சந்மானத்தாலே மகாராஜா பெரிதும் மனவருட்சிகொண்டவராய்த் தமது தேவியாரின்பேரால் மேற்றிராணியாண்டவருக்கு நன்றிகூறினர். பின்னர் அவருடன் அச்சாலைவாட்டுகளையும், நோயாளரையும் அவர் பார்வையிட்டுத் திரும்பினர்.

## லூர்துபதி யாத்திரிகர்

லூர்துதிருப்பதிக்குச் சென்ற 1949-ம் ஆண்டிலே உத்தியோகபூர்வமான யாத்திரிகராய் 28 லட்சம் பேர்வரையில் சென்றிருக்கிறார்கள். இவர்களுள் ஏழு கருதினல்மாரும், இரு அப்போஸ்தொலிக்க ஸ்தானிகர்களும் 270 மேற்றிராணிமாரும் அடங்குவார்கள். திருக்கெபிச் சிற்றாலயங்களில் மாத்திரம் 55,000 திவ்விய பூசைகள் நிறைவேறியிருக்கின்றன. 23 லட்சம் நற்கருணை நிறைவேற்றங்கள் அருளப்பட்டிருக்கின்றன. 1948-ம் ஆண்டில் 16,230 பிணியாளிகள் பரிகரித்து உபசரிக்கப்பெற்றதற்குப்பதில் சென்றவருடத்திலே 20,725 பிணியாளர்கள் உபசரிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

## நேப்பிள்ஸ்நகர் அற்புதம்

இத்தாலியதேச நேப்பிள்ஸ்மாநகர் அர்ச். ஜனுவாரியாரின் ஆசனக்கோவிலிலே சிறியபாத்திரம்ஒன்றில் பூச்சியமாகவைத்துக்காப்பாற்றப்பட்டு உறைந்துகிடக்கும் இந்த அர்ச்சியசிஷ்டரின் திருஉதிரமானது, சென்றபுதுவருடப்பிறப்புக்கு முதனாள்உருகிநீர்மயமாகும் அற்புதம் நிகழ்வதாயிற்று. நான்காம் நூற்றாண்டிலே இத்திருஇரத்தம் அக்கோவிலில் சேமித்துவைக்கப்பட்ட காலமுதல் இந்நாளில் முன்னர் ஒருபோதுமே நடைபெற்றிராத ஓர் சம்பவம் இதுவாகும். வழமையிலே வருடந்தோறும் இந்தஉதிரம் வைகாசிமாசம் 16-ந்திகதியன்றும், மார்கழிமாதம் 16-ந்திகதியன்றுமே உருகிநீர்த்தன்மையாகின்றது.

## செக்நாட்டின் திருச்சபைஅதிபர்

பிறேக்நகர் அதிமேற்றிராணியாரும் செக்கோசிலோவாகியநாட்டின் திருச்சபைஅதிபருமான யோசெவ் பேறன் ஆண்டவருக்குச் சட்டசாஸ்திரசம்பந்தமான துணைவராயிருந்த டக்றர் ஜரோமிர் பிசெனிக்காஅவர்கள்அங்கிருந்தும் தப்பியோடி மேற்கு ஜேர்மனிபோய்ச் சேர்ந்திருக்கின்றார். கம்யூனிஸ்த அரசாங்கம் இடையறாமலே இம்சையும், நெருக்குவாரமும் செய்துகொண்டிருந்தபோதிலும் அந்நாட்டு மேற்றிராணிமார், உயர்பதவிவகித்துள்ள குருமார்சகலரும் அசைக்கமுடியாதவகையிலே பேறன்ஆண்டவரை ஆதரித்துவருவதாக இவர் அறிவித்திருக்கின்றார். பேறன்ஆண்டவரோ வெளிஉலகத்தில் இருந்து முற்றாகத் தனிக்கவிடப்பட்டிருக்கிறாரென்றும் அவர்கூறுகின்றார்.

## நூற்றாண்டுவிழா

இங்கிலாந்திலும், வேல்சிலும் திரும்பவும் கத்தோலிக்க மேற்றிராசன அதிகாரவரிசை நிறுவப்பெற்ற நூற்றாண்டுவிழா இவ்வருடத்திலே வருகிறபுரட்டாசிமாசம் 29-ந்திகதி வருகின்றது. அங்கு சவுத்வாக்நகரிலுள்ள அர்ச். ஜோர்ஜின் ஆசனக்கோவிலிற்றான் கருதினல் வைஸ்மன் ஆண்டவர் வெஸ்ற்மினிஸ்றரின் முதல்அதிமேற்றிராணியாராகத் தமது அதிகாரபதவிக்குரிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாயினர். அப்போது அது வெஸ்ற்மினிஸ்றர்ஆசனக்கோவிலைக் கொண்டிருக்கவில்லை. அர்ச். ஜோர்ஜின் ஆலயமே லண்டனில் ஒரேயொரு போதிய ஆலயமாயிருந்தது. ஆனால், இது யுத்தகாலத்திலே விமானங்களிலிருந்து வீசப்பட்டகுண்டுகளினால் சேதமடைந்துபோய்இருக்கிறது. அதனால் இதன் மேற்கூரை க[illegible] றாண்டுவிழா ஆரம்பமுதற்பூசைக்கு உபயோகிக்கப்படவிருக்கிறது.

## இளவரசிக்குத் திருப்பட்டம்

பிரான்ஸ்தேச முத். ஜோன் தேவலுவா அதாவது வலுவாவின் அருளம்மாளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டும் திருவைபவத்தின்போது அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே சமுகமளிக்குமாறு ஆரோபணமாதா சபைக்குருமாரின் பரிசுத்தவருட திருயாத்திரை லண்டனிலிருந்து வைகாசிமாசம் 20-ந்திகதி ஆரம்பமாகும். பிரான்ஸ்தேச பதினைந்தாம் லூயிஸ்அரசரின் குமாரத்தியான முத். அருளம்மாள் "அனன்சியேட்" எனவும் அறியப்படுகின்ற கன்னிமரியாயின் சபையை அடியிட்டவள். இங்கிலாந்திலே கென்ற்நகரிலுள்ள அனன்சியேட் மடத்திலே தனதுமத்தியதானத்தைக் கொண்டுள்ள சமாதான கன்னிகாசபையை நிர்மாணித்தவள். இவ்விளவரசிக்கு வைகாசிமாதம் 28-ந்திகதியாகிய திவ்விய இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளன்று அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்படவிருக்கிறது.

## இந்திய-திருயாத்திரை

பரிசுத்தவருடயாத்திரையிலே இந்தியகத்தோலிக்க யாத்திரிகரை ஏற்றிச்செல்வதற்கென்று தேசியகம்மிற்றி பதினாயிரம்தொன் நிறைகொண்ட 'றோமா'எனும் பிரயாணக்கப்பலை அமர்த்தியிருக்கின்றது. இந்தக்கப்பல் வருகிறசித்திரைமாச நடுப்பகுதியிலே பம்பாயிலிருந்து யாத்திரிகரைஏற்றிக்கொண்டு பிரயாணப்படவிருக்கிறது. இவர்கள் நேப்பிள்ஸ்,பொம்பே,சிவிற்றுவெக்கியா, றோமாபுரி, அசிசி, மார்சேல்ஸ், லூர்து, லிஸ்பன், பாத்திமா, லண்டன் ஆதியாம்நகர்கள், திருக்ஷேத்திரங்களைத் தரிசிப்பார்கள். இவர்கள் றோமாபுரியிலே ஒரு முழுவாரம் தங்கியிருப்பார்கள். இவர்களின் யாத்திரை அறுபதுநாட்கள்வரையில் நீடித்திருக்கும்.

## நானா சங்கதிகள்

❁ தற்போது றோமாபுரியிலுள்ள பாப்பரசரின் கிறகோரிய, லத்தறன், விசுவாசப்பரப்புதற் சர்வகலாசாலைகளிலே நாற்பதுபேருக்கு மேற்பட்ட குருமாரும், குருத்துவ மாணவர்களும் வேதசாஸ்திரம், தத்துவசாஸ்திரம் ஆதியன கற்றுவருகின்றார்கள். இவர்கள் கும்பகோணம், கோட்டையம், கொச்சி, கோவா, திரிச்சூர், கொல்லம், திருவல்லா, ஏர்ணாக்குளம முதலாம் பல மேற்றிராசனங்களையும் சேர்ந்தவர்கள்.

❁ அமெரிக்க ஐக்கியதேசத்திலே கத்தோலிக்கரின்தொகை கடந்த ஐம்பதுவருடங்களிலும் 1 கோடியே 68 லட்சத்து 10 ஆயிரத்து 931 பேரால் அதிகரித்துத் தற்போது 2 கோடியே 67 லட்சத்து 18 ஆயிரத்து 343 பேராகியிருப்பதாக அத்தேச உத்தியோகபூர்வமான 'கதலிக் டிறெக்ரறி' தெரிவிக்கின்றது.

❁ 1900-ம் ஆண்டு அமெரிக்க ஐக்கியதேச குடிசனத்தொகையாகிய 7கோடியே 44 லட்சம்பேரில் நூற்றுக்குப்13விகிதமானோர் கத்தோலிக்காய் இருந்தார்கள். இன்று அத்தேச சனத்தொகையாகிய 14 கோடியே 70 லட்சம்பேரில் நூற்றுக்குப் 18விகிதமானோர் கத்தோலிக்காய் இருக்கின்றார்கள். அங்குகடந்த 50 வருடங்களிலும்அதிமேற்றிராணிமார்,மேற்றிராணிமாரின்தொகையும் 188 பேரிலிருந்து 340 பேராய் அதிகரித்துள்ளது.

❁ றோமாபுரியிலே மிகப்பெருந்தொகையானயாத்திரிகர் சமுகமாவார்களென எதிர்பார்க்கப்படுவதால் இம்மாசம் 12-ந் திகதி ஞாயிறன்று பரிசுத்தபாப்பரசரின் மகுடதாரண 11-ம் ஆண்டு நிறைவுவிழாத் திருவைபவங்கள் இவ்வருடம் வழமைபோலச் சிஸ்[illegible] அல்ல, அர்ச். பேதுருவானவர்ஆலயத்தில் நடந்தேறுமெனச் செய்தி கிடைத்திருக்கிறது.

❁ ஏழைகளான யாத்திரிகருக்கு—விசேஷமாய்த் தரும ஸ்தாபனங்கள் மூலமாக றோமாபுரி செல்லவியலாத யாத்திரிகருக்கு அங்கே இலவச தங்குவசதிகள் அருளுவதற்கான ஒழுங்குகள் தற்போது செய்யப்படுகின்றன. சென்வின்சென்ற் டீ போல் பிறதர்மாரும், சீமாட்டிகளும், அர்ச். பேதுருவானவர் வட்டாரத்தினரும் அவற்றிற்குப் பொறுப்பாளிகளாய் இருப்பார்கள்.

❁ சாடினியாவின் டவேஜர் இராணியார் உலகசருமங்களிலிருந்து விலகி இளைப்பாறிக் கன்னிகாமடம் ஒன்றிலே எஞ்சியுள்ள தனது சீவியகாலத்தைக்கழிக்கத் தீர்மானித்திருக்கிறாரென ஜேர்மனியிலே பிரசுரமாகும் "ஒக்ஸ்பேர்க் அவ் கசெற்"எனும் பத்திரிகை கூறுகின்றது. தற்போது அவர் வசித்துவருகின்ற "வில்லா றவினெல்லா" எனும் மாளிகையை யேசுசபைக்குக் கொடுத்துவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது.

## "செபமாலை நவநாள்"

ஆங்கிலத்திலே சாள்ஸ் வி. லசே அவர்களால் எழுதப்பெற்ற இதனைத் தமிழாக்கஞ்செய்தவர் தூத்துக்குடி, வண. ஜே. எம். நிக்கொலாஸ் சுவாமி அவர்களே. பிரசுரித்தவர் எஸ். ஞானப்பிரகாசம்அவர்கள், தூத்துக்குடி. 44 பக்கங்கொண்டது. பிரதிவிலை அணா 2. கிடைக்குமிடம்: அர்ச். சவேரியார் அச்சகம், தூத்துக்குடி.

"குழந்தாய், நீ பலவித பேர்களைச் சொல்லி என்னை அழைத்துப் பல உதவிகள் பெற்றிருக்கிறாய். இப்பொழுதோ எனக்கு மிகவும்பிரியமான 'திருச்செபமாலையின் இராக்கினியே' என்னும் பேர்சொல்லி என்னைஅழைத்தமையால் நீ கேட்கும்உபகாரத்தைக் கொடாதிருக்கமுடியாது. இந்தப்பேர் எனக்கு மிகவும் உகந்தது. மூன்று (செபமாலை) நவநாட்கள்செய், உனக்கு எல்லாம் கிடைக்கும்...... என்னிடம் உதவிபெற விரும்புகிறவர்கள் தாங்கள் கேட்கிற் காரியம் அனுகூலமாகும்படி மூன்றுசெபமாலைநவநாட்களும், அதேபோல் நன்றியாக மூன்றுசெபமாலை நவநாட்களும் செய்வார்களாக" என்று தேவதாயார் பதின்மூன்றுமாதகாலம் நோய்வாய்ப்பட்டுச் சொல்லொணு வேதனை அனுபவித்துக்கொண்டிருந்த தளபதி அக்ரெல்லியின் மகள் போர்த்தூனுவுக்குச் செபமாலைநவநாள் ஒன்றின் முடிவில் காட்சியளித்துக் கூறலாயினர். அதனால் மாதாகூறிய 'விண்ணப்ப செபமாலை' நவநாட்கள் மூன்றையும்,'நன்றியறிதல் செபமாலை' நவநாட்கள் மூன்றையும் தக்கவாறு பயபக்தியாய்ச்செய்து அனுகூலமடைதற்கான வழிவகைகளையே இந்நூல் தெளிவாக எடுத்துக்காண்பிக்கின்றது. வெண்பனிக்கட்டிபோன்ற மலர்கள் யாவை? இரத்தம்போன்ற சிவந்த மலர்கள் யாவை? வெண்றோசா மலர்கள் யாவை? இந்த மூவித மலர்மாலையுடன் சேர்க்கவேண்டிய இரத்தினங்கள் என்ன? நாம் செபமாலையை உச்சிதமேரையாய்ச் செபிக்கும்போது மாதா நமக்குக்காண்பிக்கும் அழகிய வாழ்க்கைச் சித்திரங்கள் எவை? செபமாலையுடன் சம்பந்தப்பட்ட இவைகளையெல்லாம் இந்நூல் சிறப்பாக விளக்கிக் காட்டுகின்றது. ஆகவே செபமாலையைப் பத்தியாய்ச்சொல்ல ஆசிக்கிறவர்களும், செபமாலைப்பத்தியைப் பரப்ப ஆசிக்கிறவர்களும், செபமாலை நவநாட்கள் ஆறையும் சரிவரச்செய்ய ஆசிக்கிறவர்களும் செபமாலை இராக்கினியின் புகழைப் பாடும் இந்த அருமையான நூலை வாங்கிப்படித்துப் பெரும்பயன் எய்துவார்களென நம்புகின்றேம்.

நமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய மேற்றிராணிமார்களின்

# முதல் தேசிய பூரண சங்கத்தின் பொது நிருபம்

சங்கத்தில் கூடியிருக்கும் அதிமேற்றிராணிமார்களும், மேற்றிராணிமார்களும், அப்போஸ்தொலிக்க பரிபாலகர்களும்:

**நமது விசாரணைக்குட்பட்ட, நமது அன்பார்ந்த சகோதரர்களும் பிள்ளைகளுமாகிய மேற்றிராசன துறவற குருக்களுக்கும், கன்னியர் சந்நியாசிகளுக்கும், சமஸ்தவிசுவாசிகளுக்கும் சௌபாக்கியமும் ஆசீர்வாதமும் உண்டாவதாக!**

(முன்தொடர்ச்சி)

அடுத்தபடியாக, சருவேசுரனும், இயற்கையும் உங்கள்மீது சுமத்தியிருக்கும் ஒருபெரிய கடமையைப் பற்றி உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம். அதாவது, குடும்பசீவியத்தையும், பிள்ளைவளர்த்தலையும் பற்றிய கடமை. குடும்பமே உலகிலுள்ள மனிதசமுதாயங்களுள் அதிகப் பழமையான, ஆதிச்சமுதாயம். அதன் மகத்துவத்தையும், பரிசுத்ததனத்தையும் பாதிக்கக்கூடிய எதுவையும் நீங்கள் எதிர்த்துநிற்கவேண்டும்.

குழந்தைகளுக்குக் கல்விப்பயிற்சியளிப்பது, பெற்றோருக்கே சொந்தமான தவிர்க்கமுடியாத ஒருஉரிமை. இந்தஉரிமையைக் காப்பாற்ற நீங்கள் விழிப்பும், விடாமுயற்சியுமுள்ளவர்களாய் இருப்பதுஅவசியம். பிள்ளைகள், நீங்கள்உங்கள் இஷ்டப்படியெல்லாம் நடத்தக்கூடியபிராணிகள், அல்லது பொருட்களல்ல; சருவேசுரனால்சிருஷ்டிக்கப்பட்டுச் சருவேசுரனையே கதியாகக்கொண்ட ஆள்தன்மையை உடையவர்கள் குழந்தைகள். ஆகையால் தெய்வபயமும், தேவசிநேகமும்உள்ளவர்களாய் அவர்களைவளர்த்துவருவது அவசியம். தவிர, அவர்களுடைய கடைசிக்கதியை மனதில்கொண்டு, அதற்கேற்க உத்தமகிறீஸ்துவர்களாகவும், நாட்டின் நல்லகுடிகளாகவும் இருக்கும்படி அவர்களைக் கவனித்துக் கொண்டு வரவேண்டும்.

பிள்ளைகளின் இளம்பிராயத்திலிருந்தே அவர்களுக்குக் கல்விப்பயிற்சி ஆரம்பிக்கவேண்டும். பெற்றோரின் வார்த்தையும் முன்மாதிரிகையுமே குழந்தைகள்கற்கும் முதற்பாடம். தாய்தான் முதல்உபாத்தியாயினி; ஏனெனில், குழந்தைகளின் அன்பையும், உணர்ச்சிகளையும் தன்வசப்படுத்தக்கூடியவள் அவள்ஒருத்தியே. மனிதசீவியத்தின் உன்னதமான இலட்சியங்களை வாழ்க்கையின் நோக்கமாக, அவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள். அவர்கள் பிற்காலத்தில் குருக்களாய், அல்லது துறவிகளாய்த் தங்களைத்தேவஊழியத்துக்குக் கையளிக்கவிரும்பினுல், அந்தவிருப்பம் அவர்கள்மனதில் வளரும்படி செய்வது கிறீஸ்துவ கடமை என்பதை மறக்கவேண்டாம். குழந்தைகளுக்கு உண்டாகும் இந்தநாட்டம் தமதுசித்தப்படிவீசும் பரிசுத்த இஸ்பிரீத்துவின் முதல்தூண்டுதலாய் இருக்கலாம். இந்தியாவுக்கு அதிக மதிகமான குருக்கள் தேவைஎன்பது நீங்கள் அறியாததல்ல.

குழந்தைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பும்போது, அவர்கள்படிக்கப் போகும்பாடசாலை கத்தோலிக்க சூழ்நிலையுள்ளதா என்று கவனிப்பதுமகா முக்கியம். இதுவிஷயமாய்ப் பதின்மூன்றுஞ்சிங்கராயர் வெகுதெளிவாய்க் கூறியிருக்கிறார்: "பிள்ளைகள், வேதம், சன்மார்க்கம் சம்பந்தப்பட்ட கல்வியும், தேகப்பயிற்சியும் அடைவதோடு, அரசியல் ஞானமுள்ளவர்களாகவும் இருக்கச்செய்வது பெற்றோரைச்சார்ந்த மிகவும் முக்கியமான கடமையாகும். ...தப்பறைகளாகிறநஞ்சு அவர்களைத் தீண்டத்தக்க ஆபத்தானபாடசாலைகளுக்கு அவர்களை அனுப்பாமலிருப்பதும் கண்டிப்பான கடமையே." (Sapientiae Christianae, 1st January, 1890) மிகவும்அபூர்வமான சந்தர்ப்பங்களில், அதுவும் மேற்றிராணியாரின் விசேஷ அநுமதியின்பேரில் மட்டும் கத்தோலிக்கபாடசாலையல்லாத வேறு பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பலாம். இதுவிஷயத்தில் மேற்றிராணியார் ஒருவரே தீர்மானஞ் செய்யக்கூடியவர். இதைத் திருச்சபைச்சட்டமும் வற்புறுத்திக்கூறுகிறது. (தி. ச. 1374 பார்க்க) இக்கனமான கடமையைப்பற்றிப் பெற்றோருக்கு அறிவுறுத்துவது மேற்றிராணிமார் கடமையாகும்.

பிள்ளைகள் பள்ளிக்கூடப்படிப்பை முடித்தபிறகும் அவர்கள்ஏதாவது இரகசியசபைகளில், விசேஷமாய் கம்யூனிஸ்தப்பகுதிகளில் சேராதபடி அவர்களைக்கண்காணித்து வரவேண்டும். தொழிற்சாலைகள்உள்ள அநேகம்பட்டணங்களில் கம்யூனிஸ்தக்கட்சியின் கிளர்ச்சிஅதிகம். இக்கட்சியைச்சேர்ந்தவர்கள், தங்கள்கொள்கைகளில் காணப்படும் தெய்வநிந்தைகளையும், திருச்சபைக்கு ஏற்காத விஷயங்களையும் மறைத்து, வெளிக்குப்பகட்டான பலநியாயங்களைச்சொல்லி, வாலிபர்களை எளிதில் ஏமாற்றிவிடுவது சகஜம். இன்றைய பாலகர்கள்தான் நாளைக்குநம் நாட்டை ஆளுகிறவர்கள். இந்தத் தலைமுறையில் விதைக்கப்படும் கல்வியின்வித்துத்தான் அடுத்ததலைமுறையில் பலன்தரும்என்பதை ஊன்றி நினைக்கவேண்டும். "நீங்கள் காற்றை விதைத்தால் புயலைத்தான் அறுப்பீர்கள்" (ஓசே. 8:7) என்பது தேவவாக்கு. உங்கள்சீவியத்தின் வேறு பல அம்சங்களைப்பற்றியும் உங்களுக்கு எடுத்துச்சொல்லலாம். தற்சமையம் இவ்வளவுசொன்னது போதுமென்று நினைக்கிறோம். சந்தர்ப்பம்வாய்க்கும் போது, ஒவ்வொரு மேற்றிராணிமாரும் தங்கள்மேற்றிராசனக் கிறீஸ்துவர்களுக்கு அவைகளைப்பற்றி எடுத்துக் கூறுவார்கள்.

கடைசியாய், அன்பார்ந்த பிள்ளைகளே, நீங்கள் வேதாநுசாரங்களில் ஊக்கமும் தைரியமும் உள்ளவர்களாய்இருங்கள். நமதுசத்தியமறைக்காக இரத்தம்சிந்தி, உயிரைக்கொடுத்தவர்களின் தொகையை ஆயிரம், இலட்சக்கணக்கில் எண்ணவேண்டும். ஆகையால், நீங்கள் உங்கள் விசுவாசத்தைக் குறித்து வெட்கப்படவேண்டாம். "நான்விசுவாசத்தைப்பற்றிக் கூச்சப்படமாட்டேன், விசுவசிக்கிற எவனுக்கும் அது இரட்சணியமாகிற தேவவல்லபமாயிருக்கிறது." (ரோமர் 1:16) "மனிதர் உங்கள்நற்கிரிகைகளைக்கண்டு பரமண்டலங்களிலிருக்கிற உங்கள்பிதாவை மகிமைப்படுத்தும் பொருட்டு, உங்கள்ஒளி அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது". (மத் 5:16) தேசத்தின் பலவகுப்பினர்மத்தியிலும், உலகத்திலுமே சமாதானம் ஏற்படும்படி ஐக்கிய மனப்பான்மையோடு ஒத்துஉழைக்கும்படி உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறோம். தவிர, தரித்திரம் துன்பம் அனுபவிக்கிறவர்களின் கஷ்டங்களைப்போக்கவும், உலகில் கிறீஸ்துநாதரின் இராச்சியம் பரவவும், சருவேசுரனுடையமகிமைக்காக

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

## வேத விஞவிடை

— V —

சுதனுனவர் எங்கள் மீட்பர்

### (5) பச்சாத்தாபம்

108. பச்சாத்தாபம் ஆவதுஎன்ன?

ஞானஸ்நானத்துக்குப்பின் செய்த பாவங்களையெல்லாம் மன்னித்து நம்மை நீதிமான்களாக்கி, பாவங்களைத் தைரியத்தோடுவிலக்க நமக்குத் தேவ உதவியைத்தரும் திவ்வியனுமானமே பச்சாத்தாபமாம்.

> "சருவேசுரனே கிறீஸ்துநாதர் மூலமாய் நம்மைத்தம்மோடு மறுஉறவாக்கி, மறுஉறவாக்குகிற தொழிலையும் எங்களுக்கு அளித்தார். அதெப்படியென்றால் சருவேசுரன் உலகத்தாருடைய பாவங்களை அவர்கள்பேரில்சாட்டாமல், அவர்களைக் கிறீஸ்துநாதர்வழியாய்த் தம்மோடு மறுஉறவாக்கி, அந்தமறுஉறவாக்குதலின் வாக்கியத்தை எங்களிடம் ஒப்புவித்தார்"—2. கொரி. V. 18–19.

109. பச்சாத்தாபத்தை யேசுநாதர் ஏற்படுத்தினுரா?

ஆம். அவர் அப்போஸ்தலர்மேல் ஊதி: "பரிசுத்தஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் ஆருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு மன்னிக்கப்படும். ஆருடைய பாவங்களைக்கட்டி வைப்பீர்களோ அவைகள் கட்டிவைக்கப்படும்" என்று திருவுளம்பற்றி அதை ஏற்படுத்தினுர் (அரு. XX. 22—23).

110. பச்சாத்தாபத்தின் திவ்வியனுமானப்பொருள் என்ன?

ஞானஸ்நானத்துக்குப்பின் கட்டிக்கொண்டதும் முந்தினபாவசங்கீர்த்தனத்தில் மன்னிப்படையாததுமான சாவானபாவங்களே பச்சாத்தாபத்தின் அவசியமானபொருள். ஆனுல் அற்பபாவங்களும் முந்தினபாவசங்கீர்த்தனத்தில் மன்னிப்படைந்த சாவானபாவங்களும் போதுமான பொருளாயிருக்கும்.

111. பச்சாத்தாபத்தின் மாத்திரை என்ன?

"பிதாவுடையவும் சுதனுடையவும் பரிசுத்தஆவியுடையவும் நாமத்தினுலே உன்பாவங்களைப் பொறுக்கிறேன்" என்று குருவானவர் பாவப்பொறுத்தல்கொடுத்து உச்சரிக்கும் வார்த்தைகள்தான்.

112. பச்சாத்தாபத்தைநிறைவேற்றுகிற அதிகாரி ஆர்?

குருத்துவ அபிஷேகமும், பாவசங்கீர்த்தனத்தைக் குறித்தஇடத்தில் அல்லது குறித்தஆட்களிடமிருந்துகேட்க அதிகாரமும் பெற்றுக்கொண்டவர்தான்.

113. பிரிவினைக்குருக்களும் தங்கள் அதிகாரத்தை இழந்த குருக்களும் கொடுக்கிற பாவப்பொறுத்தல் பலிக்குமோ?

அப்பேர்ப்பட்டவர்கள் கொடுக்கிற பாவப்பொறுத்தல் பலியாதிருப்பது மன்றிப் பெருந்தேவதுரோகமுமாகும்.

114. மரணச்சமீபத்தில் பாவப்பொறுத்தல் கொடுக்கக் குருமார்சகலருக்கும் அதிகாரம் உண்டா?

ஆம். மரணச்சமீபத்தில் குருமார் சகலருக்கும் திருச்சபை அந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றது.

115. குருமார் பாவசங்கீர்த்தன இரகசியத்தைக் காப்பாற்றவேண்டுமா?

ஆம். அதை வெளிவிடுவதிலும் பார்க்க மறியலுக்கும் மரணஆக்கினைக்கும் உட்படக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படியே அநேகர் உட்பட்டுமிருக்கிறார்கள். அந்த இரகசியத்தைத் தற்செயலாய் அறிந்தகுருமார் அல்லாதவர்களும் அதைக்காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

116. பச்சாத்தாபத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியாளி ஆர்?

ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவராய், மனஸ்தாபத்துடனும் உத்தரிப்புச்செய்யும் கருத்துடனும் பாவசங்கீர்த்தனம் பண்ணுகிறவர்தான்.

117. பாவசங்கீர்த்தனம் ஆவது என்ன?

தான் நிச்சயமாய்ச் செய்ததும்அறிக்கையிடாததுமான சாவானபாவங்களையும், அவைகளின் இனத்தையோ தொகையையோ மட்டுப்பண்ணஉதவும் விபரங்களையும், ஞாபகத்துக்கும் வசதிக்கும்தக்கபடி வெளிப்படுத்துவதே பாவசங்கீர்த்தனமாம்.

> "நம்முடைய பாவங்களை நாம் சங்கீர்த்தனம்பண்ணினுல், நம்முடையபாவங்களை நமக்கு மன்னித்துச் சகலஅக்கிரமத்திலும் நின்று நம்மைப்பரிசுத்தமாக்குவதற்கு அவர் பிரமாணிக்கமும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"—1. அரு. I. 9.

118. பாவசங்கீர்த்தனத்தில் "சாவானபாவங்களை" மாத்திரம் வெளிப்படுத்தக்கடமையா?

ஆம். ஆனுல் அற்பபாவங்களையும் வெளிப்படுத்தினுல் அவைகளுக்கு மன்னிப்பும் அவைகளைவிலக்க உதவியும் கிடைக்கும்.

119. பாவசங்கீர்த்தனத்தில் பாவங்களின் "இனத்தையோ தொகையையோ மட்டுப்பண்ண உதவும் விபரங்களை" மாத்திரம் வெளிப்படுத்தவேண்டுமா?

ஆம். வேறுவிபரங்கள் அவசியமில்லை. உதாரணமாக, பிறருடைய குறைகுற்றங்களையும் பாவக்கூட்டாளியின்பெயரையும்வெளிப்படுத்தப்படாது.

120. "ஞாபகத்துக்குத் தக்கபடி" பாவசங்கீர்த்தனம் பண்ணினுல் போதுமா?

ஆம். நாம் கவனத்தோடு ஆத்தும சோதனைசெய்து பாவசங்கீர்த்தனம் பண்ணினபின், நாம்செய்த வேறுசாவானபாவங்கள் ஞாபகத்தில் வந்தால், அவைகளை அடுத்தபாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தினுற்போதும். அதற்கிடையில் நற்கருணையும் வாங்கலாம்.

121. பாவங்களை "வசதிக்குத்தக்கபடி" வெளிப்படுத்தினுற்போதுமா?

ஆம். பேசஇயலாத தருணத்திலும், அபாயநேரத்தில் பொதுப்பாவப்பொறுத்தல் கொடுக்கும்வேளையிலும், தான் பாவியென்று சயிக்கினையினுல் ஒத்துக்கொண்டாற்போதும். ஆனுல் அதற்குப்பின் பாவசங்கீர்த்தனம் விபரமாகச்செய்ய வசதிவந்தால், அதில் இதுவரைக்கும் சொல்லாதசாவானபாவங்களைவிபரமாய்வெளிப்படுத்தவேண்டும்.

122 நாம் "நிச்சயமாய்" செய்ததும் "நிச்சயமாய்" அறிக்கையிடாததுமான பாவங்களை வெளிப்படுத்தினுற் போதுமா?

ஆம். பாவம் செய்ததோ செய்யவில்லையோ, அல்லது சாவானபாவமோ அற்பபாவமோ, அல்லதுமுந்திஅதை அறிக்கையிட்டதோ இல்லையோஎன்று உண்மையாகச் சந்தேகப்பட்டால், அதை வெளிப்படுத்தக்கடமைஇல்லை. என்றாலும் அதைச் சந்தேகமுள்ளது போல வெளிப்படுத்தலாம். ஆனுல் பாவம்செய்யமுதல், பாவமோ பாவமில்லையோ என்ற சந்தேகத்துடன் செய்தால் அது பாவமாகும். சாவானபாவமோ அற்பபாவமோ என்றசந்தேகத்துடன்செய்தால் அது சாவானபாவமாகும்.

123. பழைய பாவசங்கீர்த்தனங்களைப் புதிப்பித்துப் பொதுப்பாவசங்கீர்த்தனம் பண்ணலாமா?

கள்ளப் பாவசங்கீர்த்தனத்தைத் திருத்தவேண்டியவர்களுக்கு இது பெருங்கடமை. சந்தேகங்களைத் தீர்க்க எண்ணுவோருக்கு இது நல்லது. ஆறுதல் அடையவிரும்புவோருக்கு இது உத்தரவு. ஆனுல் எல்லாவற்றிலும் ஐமிச்சப்படுகிற மனக்கலக்கமுள்ளவர்களுக்கு இது கூடாது.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

பங்குனிமாதம் 1950

| | | |
|---|---|---|
| வெ | 10 | அர்ச். 40 வேதசாட்சிகள் |
| சனி | 11 | அர்ச். எயுலோஜியார், கு. வே |
| ஞா | 12 | தபசுகாலத்தின் 3-ம்ஞாயிறு—அர்ச். மகா கிறகோரியார், பா. வேதபா. |
| திங | 13 | அர்ச். எயுப்பிருசியம்மாள், க. |
| செவ் | 14 | அர்ச். மத்தில்தம்மாள், இ. |
| புத | 15 | அர்ச். லொஞ்சினூர், வே. |
| வியா | 16 | அர்ச். அபிராம், மூ. |

சத்தியவேத
பாதுகாவலன்

1950-ம் ஆண்டு
பங்குனிமாதம் 9-ந் திகதி

## பாப்பரசரின் கருத்துகள்

பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர் பாப்பரசராகத் தெரியப்பெற்ற 11-ம்வருட நிறைவுவிழாவையும், அவரது 74-வது பிறந்த பெருநாளையும் கத்தோலிக்க உலகமுழுவதும் நிகழும்பங்குனி மாதம் 2-ந்திகதி வியாழக்கிழமை குதூகலமாகக் கொண்டாடியது. பரிசுத்ததந்தைஅவர்கள் மனமேதளராது அவ்வளவாக மனுப்பேசித் தூண்டிவருவதும், நம்பிக்கையேதவறாது அவ்வளவாகப்பிரார்த்தித்து மன்றாடிவருவதுமான சமாதானத்தை—நீதியை அடிப்படையாகக் கொண்ட உலகசமாதானத்தைச் சீவந்தராயிருந்து கண்டுகளிக்குமாறும், அவரது சுகிர்த கருத்துகள் விரைவிலே நிறைவேறுமாறும் உலகின் ஏனைய பகுதிகளிலுள்ள கத்தோலிக்க மக்களுடன்—விசேஷமாகத் தற்போது ரோமாபுரியில் நிற்கும் திருயாத்திரிகர்களுடன் நாமும் ஒன்றுசேர்ந்து திரியேகபரம்பொருளை இருகரமெடுத்து வேண்டுதல்செய்வோமாக. பாப்பரசரது பரிசுத்தவருட சுகிர்த கருத்துகளில் சிலவருமாறு:—(1) உலகில் வேலையில்லாமல் இருந்துவருகிறவர்கள் நேர்மையாகச் சீவனம்நடத்தப்போதிய சம்பளம்பெறக்கூடிய வகையிலே வேலைகொடுபடவேண்டும் என்பது. (2) சனசாகியங்களிடையே நீதியானசகோதரத்துவ உடன்படிக்கையின்மீது அஸ்திவாரம் இடப்பட்ட ஓர்ஐக்கியம் உண்டாகும்படியாய் வகுப்புவாத குரோதம்ஒழிய வழிபண்ணவேண்டும் என்பது. (3) திருச்சபையின்மக்களாய் உள்ளவர்கள் அசைவற்ற உறுதியான நிலைமையுடன் விசுவாச பிரமாணிக்கத்தைக் காப்பாற்றிவரவேண்டும் என்பது. (4) உண்மையான சமாதானம் உலகில் ஏற்படவேண்டும்என்பது. (5) விசேஷமாகப் பலஸ்தீனவின் பிரதேசங்களில் ஒழுங்குமுறையான அமைதி திரும்பவும் நிலைநாட்டப்படவேண்டும் என்பது. ஆனல், மிகவும் விசேஷப்பட்ட பத்திரம்ஒன்றைப்பற்றித் தற்போது ரோமாபுரியிலிருந்து கிடைத்திருக்கும் செய்திஒன்றையிட்டு, மற்றும் ஓர் முக்கியமான கருத்து சேர்க்கப்படவேண்டியிருக்கிறது. அதாவது, “ஓர் காலம் திருச்சபையில்சேர்ந்திருந்தவர்களும், கடவுளைமறுதலிக்கிற அல்லது பகைக்கிறவர்களுமாகிய இருபாலாருமாய்த் திருச்சபைக்குப்புறம்பாக இருந்துவருகிறவர்களெல்லாம் சுவிசேஷபோதனைகளுக்கு அமையும்படியாகக் கொண்டுவரப்படவேண்டும்’’ என்பதே. ஆதலால் பரிசுத்தபிதாவின் இச்சுகிர்தகருத்துகள் வெற்றிகரமாக நிறைவேறும்படியாய்க் கத்தோலிக்க மக்கள்அனைவரும் இந்தப்பரிசுத்தவருடத்தில்விசேஷகரிசனையுடன் மன்றாடிவருவது அவர்கள் கடமையாகும்.

## அழிவுக்கு அகந்தை

“திருச்சபைக்குப் புறம்பாய் என்னைத் தள்ளிவிடப்போவதாகச்செய்யும் அச்சுறுத்தலாலே பாப்பாண்டவர் என்ன கருதுகின்றார்? ஆயிரம் வருடங்களுக்கு முந்திய உலகம் இதுவென அவர் நினைக்கின்றாரா? எனது போர்வீரர்களின் கரங்களிலிருந்து ஆயுதங்கள் கீழே விழுந்துவிடுமென்றுதான் அவர் எண்ணுகின்றாரா?’’ என்றுவீர பிரதாபம்படைத்த நெப்போலியன் சக்கிரவர்த்தி 1807-ம் ஆண்டில் ஓர்நாள் அறைகூவினன். இதுநிகழ்ந்து இருஆண்டுகள் சென்றன. பாப்பாண்டவர் சக்கிரவர்த்தியென்றும் பாராது திருச்சபைக்குப் புறம்பாகஅவனைத் தள்ளிவிட்டார். அதன்மேல் நான்குவருடங்கள் கழிந்தன. அப்போது நெப்போலியனின் போர்வீரர்களது கரங்களிலிருந்து ஆயுதங்கள் உள்ளபடியேவிழத்தொடங்கின. தோற்கடிக்கப்பட முடியாதனவென்று கருதப்பட்டஅவனது சேனைசைனியங்கள் அந்தோ! மாரிகாலக் கடுங்குளிர்காற்றால் துர்ப்பாக்கியமான நிர்ப்பாக்கிய கதிக்குள்ளாயின. எதிர்பாராத பெரும் கஷ்டநஷ்டங்களிடையே எதிர்கொண்டு போராடவேண்டியநிர்ப்பந்தம்டையலாயின. ஈற்றிலே ஆற்றாது அவைகள் ருஷியாவிலே புறங்காட்டிஓடுகையில் குளிரினல் விறைத்துப்போன அவனது சேனைவீரர்கள் தங்கள் கரத்தில்ஏந்திய ஆயுதங்கள் தாங்கமுடியாத பாரமுடையனவாயிருக்கக் கண்டார்கள். பலமுறையும் அவர்களது விழுகைகளின்போதெல்லாம் ஆயுதங்களும் அவர்களின் கரங்களிலிருந்து விழுந்துகொண்டிருக்க, அவைகளைப் பனிப்படலத்தின்மேல் அந்தப்படியே கைவிட்டுச் சென்றார்கள். அவனுடைய சேனைவீரர்கள் தங்கள் போராயுதங்களை அப்பால் எறியவேயில்லை. ஆனல், ஆயுதங்களே அவர்களது கரங்களிலிருந்து கீழே விழுந்தன. அன்று நெப்போலியனைத் திருச்சபைக்குப்புறம்பாகத் தள்ளிய பத்திநாதபாப்பாண்டவரை மறைமுகமாகப் பின்தாங்கிநின்ற அதே தெய்வீகவல்லபமே, இன்று தம்முடையவும், தமதுநாட்டின் மக்களுடையவும் சொந்த உரிமைகளைப் பாதுகாப்பதிலே முன்னணியில் முதல்வராய் நின்ற வீரர்திலகமாகிய கருதினல் ஆண்டவரை [illegible] இம்சைப்படுத்தவும் தூண்டுகோலும், துணையுமாயிருந்த ருஷியசர்வாதிகாரி ஸ்ராலினின் ஹங்கேரிய கம்மியூனிஸ்த ஏவற்காரரான தலைவர்களையும் திருச்சபைக்குப்புறம்பாகத் தள்ளிவிட்டிருக்கும் பத்திநாதபாப்பாண்டவரையும்மறைமுகமாகப் பின்தாங்கி நிற்கிறதென்பதை இந்த மதியீனர்கள் அறிந்தாலோ! அங்ஙனம் திருச்சபைக்குப்புறப்பாக அவர்களைத் தள்ளியதையிட்டுக் கம்மியூனிஸ்தர்கள் பரிகசிப்பார்கள் என்பது எதிர்பாராததல்ல. பாப்பரசருக்குப் படைகள்உண்டா? ஆயுதபலங்கள் உண்டா? என்று மாஷல் ஸ்ராலின் அன்றொருநாள் சரசமாகக் கேட்டார்? ஆனல், பாப்பரசரும், அவரது ஞானமக்களாய் உலகமுழுவதும் பரந்திருக்கும்நாற்பதுகோடிக்கு மேற்பட்ட கத்தோலிக்கமக்களும் கையெடுத்துவரும் ஓர்ஆஸ்திகபலம்—இணையற்ற ஓர் தெய்வீகபலம் அவர்க்குண்டென்பதை இந்தநாஸ்திகபதர் அறிவரா? முரியடிக்கப்பட முடியாததென்று அவர்கர்வசிந்தையுடன் எண்ணிக்கொண்டிருக்கும் நாஸ்திகபலந்தானும் அறியுமா? கடந்த இருபதுநூற்றாண்டுகளிலும் திருச்சபை எத்தனையோ பலங்களினதும், வல்லபங்களினதும் அழிவையும், அசைவையும் கண்கூடாக் கண்டிருக்கிறது. அவ்வாறே ஸ்ராலின் மனப்பால்குடிக்கும் நாஸ்திக கம்யூனிஸ்தபலத்தின் அழிவையும், அசைவையும் அது கண்டேதீருமெனப் பூரணமாக நம்பியிருக்கலாம்.

## கடலணைநில வீட்டுத் திட்டம்

கரையூரிலே கடலணைநில வீட்டுத்திட்டமானது, யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்திருந்த சுகாதார-ஸ்தலதாபன மந்திரியார் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்களால் சென்ற 4-ந்திகதி சனிவாரம் பிற்பகல் 5 மணியளவில் திறந்துவைக்கப்பெற்று, அதன்மேல் நம்மேற்றிராணி யாண்டவரால் ஆசீர்வதிக்கப்படலாயிற்று. மந்திரியார், யாழ்ப்பாண மேயர் திரு. சி பொன்னம்பலம் அவர்களுடனும் பாராளுமன்றத்திலே யாழ்ப்பாணப் பிரதிநிதியும்கைத்தொழில்-கடற்தொழில் மந்திரியுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்களுடனும் வீட்டுத்திட்டத்தின் வாயிலாகிய சம்பத்திரிசியார்கல்லூரிவீதியில் வந்துசேரவே, நம்மேற்றிராணிஆண்டவரும், துணைமேற்றிராணியாரும், நகரசங்கஅங்கத்தவர்களும், பிரபலஸ்தர்கள் பலரும், கரையூர்வாசிகளும் பெருந்திரளாகக் காத்துநின்று குதூகலத்துடன் அவரைவரவேற்றார்கள் பின்னர்மந்திரியாரும், மேற்றிராணிமாரும், மேயர்அவர்களும் புஷ்பாரங்கள் சூட்டப்பெற்று வாத்தியவரிசையுடன் திறப்புவிழா நடைபெறவிருந்த இடத்தைஅடைந்ததும் அவ்விழா மங்களகரமாக [illegible]ேறியது.

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

நமது முகாமையின் கீழுள்ள எல்லாப்பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும். தத்தம்பாடசாலை மாணவர்களுக்கு மதிய இலவசப்போசனமளித்த கணக்கின்உணவுப்பத்திரத்தை மாதந்தோறும்நிரப்பி அடுத்துவரும் மாதத்தின் **5-ந்திகதிக்குமுன்** எமது காரியாலயத்தைச்சேரும்படி அனுப்பிவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

T. A. J. Mathuranayagam
Actg. Gen. Manager,
R. C. Schools
Jaffna, 8-3-50.

பின்தஅங்கு தீபாலங்காரஞ் செய்யப்பெற்றுத் தேசோமயமாய்விளங்கிய மைதானம்ஒன்றில் மந்திரியாருக்கு நடத்தப்பெற்ற வரவேற்புஉபசாரத்துக்கு மேயர்அவர்கள் தலைமை வகித்துப் பேசியவிடத்து: ஸ்ரீலங்காவின் பெருமைவாய்ந்த சரித்திரத்தில் இணையற்றஓர் சம்பவம்இதுவாகும்; இத்துவீபத்திலேயே மகாப்பெரிய வீட்டுத்திட்டம் இன்று திறக்கப்படலாயிற்று; இது திறக்கப்பட்டதையிட்டு யாழ்ப்பாணம் பெருமையடையவேண்டும்எனக் கூறினர். பின்னர் இத்திட்டத்தின் வரலாற்றை விரிவாகஎடுத்துக்காட்டிக் கத்தோலிக்கமேற்றிராணிமார் குருமாருக்கும், பிரதமமந்திரியாருக்கும், சேர் அருணைசலம் மகாதேவாவுக்கும் பாராட்டுரைகள் வழங்கினர், இத்திட்டமானது முற்றாகக் கரையூர்க் கத்தோலிக்க மக்களுக்கே நன்மையளிக்கிறதென்பதை அழுத்தமாகத்தெரிவித்துநின்றார்.

துணைமேற்றிராணியார் எழுந்து, திரு. பண்டாரநாயகஅவர்களுக்கும்,மந்திரிசபை அங்கத்தினருக்கும் நன்றிதெரிவித்து, அரசாங்கம்செய்துள்ள சமூகதொண்டிலே இத்திட்டத்தின் ஆரம்பமானது, விசேஷப்பட்டகின்னமாக விளங்குகிறதெனக் கூறினர். ஈற்றில் சுகாதார-ஸ்தலதாபன மந்திரியார்எழுந்து, இலங்கையிலே தனதுஇனத்திலே மகாப்பெரிய இத்திட்டம் பூர்த்தியானதுபற்றித் தமக்குண்டான சந்தோஷத்தைத் தெரிவித்து, தமக்கு அருளப்பெற்ற மகத்தான வரவேற்புஉபசாரத்துக்காகநன்றிபாராட்டினர். இவ்வாறாக எழுபது வருடகாலப் பெருமுயற்சியின் விளைவாய்க் கடலணைநிலவீட்டுத்திட்டமானது அழகிய 460 வீடுகளையும், ஓர்விளையாட்டுமைதானம், ஓர்சனசமூக நிலையம், ஓர் பிரசவவிடுதி,ஓர்மீன்பிடிவள்ளத்துறை, குழாய்மூலம் நல்லதண்ணீர் ஆதியவற்றைக்கொண்டதாய், ஓர்பாடசாலை, ஓர்நந்தாவனம் ஆதியவற்றிற்கான வசதிகளையுடையதாய்,அதனல்இன்று கரையூர் ஓர்மாதிரிநகராய், குருநகராய்க் காட்சியளிக்கக்காண்பதுஆனந்தமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தபசுகாலத்தின்
## 3-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(லூக். 14: 4—28)

அக்காலத்தில் யேசுநாதர் ஓர் பசாசைத் துரத்தினர். அது ஊமையாயிருந்தது. அவர் பசாசைத்துரத்தினபின்பு ஊமையன் பேசவே சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களிற் சிலர்: இவன் பசாசுகளின் தலைவனுகிய பெயேல்சேபூபினுற்பசாசுகளைத் துரத்துகிறுன் என்றூர்கள். வேறுசிலர்: அவரைச் சோதிக்க வானத்திலிருந்து ஓர் அற்புதத்தை அவரிடத்தில் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனல், அவர் அவர்களுடைய நினைவுகளைக் கண்டமாத்திரத்தில் அவர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்த எந்த இராச்சியமும் பாழாய்ப் போகும்; அப்படிப் பிரிந்த வீடும் வீட்டின்மேல்விழும். அப்படியிருக்கப் பசாசுதனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்து போனல் அதின் இராச்சியம் நிலைநிற்கிறதெப்படி? ஏனெனில், நான் பெயேல்செபூபினுற் பசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்கள்; நானே பெயேல்செபூபினுற் பசாசுகளை ஓட்டுகிறேனுகில் உங்கள் மக்கள் யாரைக்கொண்டுஓட்டுகிறூர்கள்? ஆகையால், அவர்களே உங்களுக்கு நடுவராயிருப்பார்கள். ஆனல், சர்வேசுரனுடைய விரலாற் பசாசுகளைத் துரத்துகிறேனுகில் நிச்சயமாய்ச் சர்வேசுரனுடைய இராச்சியம்உங்களிடத்தில் வந்திருக்கின்றது. ஆயுதமணிந்த் பலசாலி தன்மாளிகையைக் காக்கிறபோது, அவனுடைய உடைமைகள்எல்லாம் பத்திரமாயிருக்கின்றன. ஆனல், அவனிலும் அதிகபலசாலி ஒருவன் திடீரென்று வந்து அவனைச் செயித்தாலோ, அவன் நம்பியிருந்த அவனுடைய ஆயுதங்கள் எல்லாவற்றையும் பறித்து அவன்உடைமைகளையும் கொள்ளையிட்டுப் பங்கிடுவான். என்னேடு இராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறுன். என்னேடு சேராதவன் சிதறிப் போகிறுன். அசுத்த அரூபியாகிய பசாசு ஒருமனிதனை விட்டு வெளிப்பட்டபின்பு, அது வரண்ட இடங்களில் இளைப்பாற்றியைத் தேடித் திரிந்தும் கிடைக்காமல், நான் விட்டுப் புறப்பட்டஎன்வீட்டுக்குத் திரும்பிப்போவேன் என்று சொல்லுகின்றது. மறுபடியும் வந்த பின்பு, அது துடைப்பத்தால் விளக்கப்பட்டுச் சோடிக்கப்பட்டிருக்கிறதைக்கண்டு, உடனே சென்று தன்னிலும் அதிகம் பொல்லாதவேறு ஏழு அரூபிகளைத் தன்னேடு கூட்டிக் கொண்டுவர, அவைகள் உட்புகுந்து அங்கே வாசஞ்செய்கின்றன. அப்போது அம்மனிதனுடைய முந்தின ஸ்திதியிலும் பிந்திய ஸ்திதி அதிக கேடுள்ளதாகின்றது என்றூர். அவர் இவைகளைச் சொல்லுகிறபோது சம்பவித்ததாவது: சனக்கூட்டத்திலிருந்து ஓர் ஸ்திரீ உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு: உம்மைச் சுமந்த உதரமும், நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம்பெற்றவைகளாமே என்று சொன்னுள். அதற்கு அவர்: சர்வேசுரனுடைய வாக்கியத்துக்குச் செவிதந்து அதை அனுசரிக்கிறவர்களே அதைவிடப் பாக்கியவான்கள் என்று திருவுளம்பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

### கத்தோலிக்க ஆசிரியைகளின் வருடாந்த
## ஞான ஒடுக்கம்

வழமைப்பிரகாரம் இம்முறையும் கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞான ஒடுக்கமானது இளவாலைத் திருக்குடும்பக் கன்னியர்மடத் தாபனத்தில் வரும் சித்திரைமாசம் 12-ந் தேதி பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகிப் (16-4-50) காலை திவ்விய பூசையோடு முடிவாகும்.

உண்டி, உறையுள் சம்பந்தமான சகலவசதிகளும் வண. தாயார்அவர்களால் செவ்வனே செய்யப்படும். இவற்றை நேரகாலத்தோடு ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதால் வரவிருப்பவர்கள் ஏற்கனவே வண. தாயார் அவர்கட்குத் தயவுடன் அறிவிப்பது நலமாயிருக்கும். ஆசிரியைகள் அல்லாத பெண்களும் பங்குபற்றுவதற்கு உத்தரவுண்டு. எனவே தங்கள் ஆன்மலாபத்தை விரும்பும் எவரும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படியாக மிக்கவிநயத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றூர்கள்.

REV. MOTHER SUPERIOR
HOLY FAMILY CONVENT,
ILAVALAI.

## பிரியதத்த வங்கி

### பிரியதத்தம்

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 26,24,481 |
| கடந்தவாரம் சொல்லியது | 61,558 |
| மொத்தம் | 26,86,039 |

### செபமாலை

| | |
|---|---|
| இதுவரையிற்சொல்லியது | 1,92,675 |
| கடந்தவாரஞ்சொல்லியது | 6,160 |
| மொத்தம் | 1,98,835 |

### திருத்திக் கொடுப்பார்

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதியிலே 434-மஇலக்கவீட்டில் வசிப்பவரான திரு. எஸ். தியடோர்அவர்கள் நவீனமுறையான "ரேடியோ செற்" றுகளைத் திறமையாகப் பழுதுபார்த்துக்கொடுக்கிறுரெனவும் அவைகள்சம்பந்தமாய்ச் சலார்எதுவும் பெருமலே ஆலோசனை கூறிவருகிறுரெனவும் அறிகின்ரூம். தினமும் பிற்பகல் 4 மணிதொடக்கம் 8 மணிவரைக்கும் அவரைக்கண்டு வேண்டியஉதவியைப் பெற்றுக்கொள்ளலாம்.

### நேர்த்தியின் பூர்த்தி

யேசுவின் திருஇருதயத்திடமும் கோடிஅற்புதவரத்தராகிய அர்ச். அந்தோனியாரிடமும் மற்றும் சகலஅர்ச்சியசிஷ்டவர்களிடமும் நான் கேட்டுக் கொண்டபடி வேலைகிடைத்தது. அதிலே மேலும் மேலும் உயர்பதவியெய்திடமதுரயேசுவின் திருஇருதயம் தயைபுரிவதாக.

N. E.

# "அவர்கள் மூன்று சிறுவர்கள்"

பாத்திமாவிலே பரமநாயகிஅளித்த காட்சிகளின் விளக்கமான வரலாறுபற்றி மூந்த வண. கனன் பார்த்தாஸ் சுவாமிகளால் பிராஞ்சியபாஷையில் எழுதப்பட்ட இந்தஅருமையான புத்தகம் சிறந்ததமிழ்அறிஞரான காலஞ்சென்ற வண. எஸ். ஆசீர்வாதம் சுவாமிகளால் தமிழில் இசைத்தெழுதப்பெற்றுத் தற்போது வெளிவந்திருக்கிறது. உலகுக்கு ஓர்செய்தியைப் பிரசித்தஞ்செய்யத் தமக்கு உறுதுணையாக்கிக்கொண்ட பரிசுத்த தேவதாயாரின் காட்சிகள்பெற்ற பெரும்பாக்கியசாலிகளான மூன்று சிறிய இடைப்பிள்ளைகளின் சம்பவத்தையே இது வர்ணிக்கின்றது. இவ்வரலாறு பெரிதும் கவர்ச்சிக்கும், அருட்சிக்குமுரியதும், ஞானேற்சாகம் ஊட்டுவதுமாகும்.

**300** பக்கங்களுக்குமேல்கொண்ட
பார்வைக்கு அழகும், வசீகரமுமான புத்தகம்.
பிரதி விலை ரூபா **2** சதம் **50**. தபாற்செலவு வேறு

விலைக்குக் கிடைக்கும் இடங்கள்:

1. அர்ச். சூசைமாமுனிவரின் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
2. கட்டளைக்குரவர், பாத்திமாகிரி பண்டத்தெருப்பு.
3. திருக்குடும்ப கன்னிகாமடம், இளவாலை.
4. தமிழ் இலக்கியக் கழகம், மேற்றிராசனமாளிகை, தூத்துக்குடி, தென்னிந்தியா.

## மரணசங்கதி

நம்பட்டணத்திலே பிரபலமாகவாழ்ந்திருந்து காலஞ்சென்ற திரு. எம். எம். எதிர்மன்னசிங்கஅவர்களின் இரண்டாவதுபுதல்வியான திருமதி மார்கறேற் எலின் மனுவேல் என்பவ சிலவருடகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து சென்ற 4-ந்திகதி சனிவாரம் ஆசனக் கோவில்வீதியிலுள்ள தனது இல்லத்தில்காலஞ்சென்ற துயரசெய்திஅறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். இவ தேவபத்தி, குருபத்தியிற் சிறந்தவவாய்க் காலஞ்சென்ற தனது பிதாவைப் போலக் கோவிற்திருப்பணிக்கும், மற்றும் தருமகைங்கிர்யங்களுக்கும் உதாரசிந்தையுடன் பொருள் உபகரித்துவந்தா. அடக்கவொடுக்கம், தயைதாட்சணியம் உடையவவாய் எவராலும் நன்குமதிக்கப்பட்டுவந்தா. பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவில் இவ மிகுந்த பக்திபற்றுதல் உள்ளவ. தான் நோய்வாய்ப்பட்டிருந்த நீடியகாலத்திலே தனக்குண்டான வேதனைகளைத் தேவசித்தத்துக்குப்பணிந்த மனதுடனும் பொறுமையுடனும் சகித்துச் செபமும், செபமாலையுங்கையுமாய் இருந்துவந்தா. இவவின் பிரேதசேமம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் பலகுருமார், குருத்துவமாணவர், பெருந்திரளான இனசனர், சிநேகிதர் கூடியசமுகத்தில் சிறப்பாக நடந்தேறியது. ஆசனக்கோவிலிலே நம்மேற்றிராணியாண்டவர் பலகுருமார், குருமடத்து மாணவர்சமேதராய் அந்திமதிருச்சடங்குகளை நிறைவேற்றினர். சேமக்காலையிலே வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள் வண. இராசகாரியர், வண. மிக்கேல்சாமி சுவாமிமார் சமேதராய்த் துக்கசங்கீதங்கள் பாடிக்கடைசிஆசீர்வாதங் கூறினின்றூர். இவவை இழந்து துன்புறும், சகோதரர், சகோதரி, மற்றும் இனசனருடன்நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

முடியாதகாரியங்களின் பரிபாலினியான அர்ச். ரீத்தம்மாளுக்கும், தவறுதஅனுகூலம்தரும் அர்ச். சவேரியாருக்கும், கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாருக்கும் நவநாள்செய்து மன்ருடிச் சில ஆச்சரியமான நன்மைகள் பெற்றுக் கொண்டோம். இவ்வர்ச்சியசிஷ்டர்களின் பேரால் சர்வேசுரன் நித்தியகாலம் ஸ்துதிக்கப்படுவாராக.

யாழ்ப்பாணம் J. A.

### உதிர்ந்த முத்து

தளபதி றுேசெக்ரான்ஸ் மற்றோர் இராணுவ உத்தியோகஸ்தருடன் வெளியேஉலாவச் சென்றிருந்தார். வழியிலிருந்த ஒரு அகன்றபள்ளத்தைக் கடப்பதற்காக ஒரு பலகை போடப்பட்டிருந்தது. அது ஒருஆள் மாத்திரமே நடந்துசெல்லக்கூடியஅவ்வளவு சிறிதாயிருந்தது. தளபதியும், அவரது நண்பனும் அதில் கால்வைக்க இருக்கும்சமயம் ஒரு ஏழை அந்தப்பலகைப் பாலத்தில் பாதித்தூரம் வந்திருப்பதைக்கண்டனர். அவன் அவர்களைப் பார்த்ததும் பின்நடந்துசென்று அவர்கள்கடக்குமட்டும் பாலத்துக்குவெளியே காத்துநின்றுன்.

தளபதியும் தமது நண்பருடன் பாலத்தைக்கடந்தார். தமக்கு வழிவிட்டுக்கொடுத்தவனுக்கு நன்றிகூறும்படி திரும்பினர். அவன் முதுகில் பெரியமூடைஒன்று இருந்தது. அது என்ன என்றுகேட்க, விற்பதற்குக் கத்தோலிக்க புத்தகங்கள் என அவன் பதிலளித்தான்.

தளபதியும், அவர் நண்பனும் கத்தோலிக்கரல்ல. கத்தோலிக்கரைப் பற்றிப் பலபொல்லாதகாரியங்களை அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். "சரி, இந்தப்பாப்பு மார்க்கத்தாரைப் பற்றி எவ்வளவோ காரியங்களைச் சொல்கிறுர்களே; இவர்கள் தங்களைப் பற்றி என்ன சொல்கிறுர்கள் எனப் பார்ப்போம்" எனத் தளபதிகூறி, அவனிடமிருந்து தமக்கு ஒன்றும், நண்பருக்கு ஒன்றுமாக இருபுத்தகங்கள் விலைக்குவாங்கினர். தளபதிக்குக் கிடைத்த புத்தகம் "கத்தோலிக்க மறை வியாக்கியானம்"

அதை வாசித்ததின்பயனுகத் தளபதி கத்தோலிக்கரானுர். அவருடைய பெண்மக்கள் இருவர் கன்னியரானுர்கள். மகன் குருவானுர். அவருடைய நண்பரான அந்த உத்தியோகஸ்தரும் சத்தியமறையிற் சேர்ந்து குருவானுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரோமைத்தபால்

### முத்திப்பேறுபெற்றபட்டம்

ரோமாபுரி அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே 30,000 மக்கள் கூடியிருந்த சமுகத்திலே சென்றமாசி மாதம் 5-ந்திகதியன்றுகாலே மரியாயின்ஊழியர் கன்னிகாசபையை அடியிட்ட சிஸ்றர் மரியா டெசலாற்று தொறெஸ் எனும் ஸ்பானிய கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டபோது, அவள்சலிகையால் அற்புதவிதமாகக் குணமடைந்த சிஸ்றர் லூஸியா அலென்டேஎனும் கன்னியாஸ்திரீயும் அங்குசமுகமாயிருந்தாள். இப்பரிசுத்தவருடத்திலே அருளப்பெற்ற இரண்டாவது முத்திப்பேறுபெற்றபட்டம். இதுவாகும். முத். தொறெஸ்அம்மாள் பிணியாளர், ஏழைகள்மத்தியில் தொண்டாற்றிய இடமாகிய மதிரித்நகரின் உதவிமேற்றிராணியாரான மோர்சில்லோ ஆண்டவர் அந்நகரின் லோட்மேயரான கவுண்ட் டே பவியோபிரபு உட்பட ஒருபெருந்தொகையான ஸ்பானியர்களுடன் அங்கு சமுகமளித்திருந்தார். சாயந்தாம் பரிசுத்தபாப்பாசர் புதிய முத்திப்பேறுபெற்ற பட்ட தாரிக்கு வணக்கஞ்செலுத்துமாறு ஒன்பதுகருதினல்மார் சமேதராய் ஆலயஞ்சென்ருர். அத்தருணம் தீபாலங்காரமுற்று விளங்கிய அவ்வாலயம் யாத்திரிகராலே தேங்கியிருந்தது. அப்போது மரியதொறெசின் திருப்பண்டம் ஒன்றும், அவள்படமும், சீவியசரித்திரவரலாறும், பரம்பரையான புஷ்பக்கொத்தும் அவருக்குச் சங்மானிக்கப்படலாயின.

### போர்வீரரும் திருயாத்திரையும்

இத்தாலியின் நாலுபகுதிகளிலும் அத்தேச தரைப்படை, கடற்படை, ஆகாயப்படையைச்சேர்ந்த போர்வீரர்களும், பிறரும் ரோமாபுரிக்கு யாத்திரைசெய்ய இராணுவஅதிகாரிகள் விசேஷவசதிகள் செய்திருக்கின்ருர்கள். இவர்களின் மூதற்கோஷ்டியினர் பட்டாளத்தால் அருளப்பட்ட விசேஷகார்களிலே சிலதினங்களின் மூன் இங்குவந்துசேரலாயினர். இவர்கள் பாவசங்கீர்த்தனஞ் செய்யத்தக்கதாக இராணுவ விசாரணைக்குருமாரும் இவர்களுடன் வந்திருந்தனர். இவர்களுக்கெனப் பட்டாளமேற்றிராணியார் நிறைவேற்றிய திவ்வியபூசையிலே சகலரும் திவ்வியநன்மை பெற்றுக்கொண்டார்கள்.

### பாப்பாசரும்அமெரிக்கநடிகரும்

ஒலே எலிசன், சிக் ஜோன்சன்எனும் இருஅமெரிக்க நாடகபாத்திரங்களுக்குப் பரிசுத்தபிதா அன்று விசேஷபேட்டி அளித்தபோது: "உலகம் அதிகமான சிரிப்பையும், மிக அதிகமான சரசஉணர்ச்சியையும் இன்றுவேண்டியிருக்கிறது" எனக் கூறலாயினர். "உலகத்தைச் சிரிக்கச்செய்யும் விசேஷ பெரியஉரிமையைக் கடவுள்உங்களுக்கு அருளியதறகாக நீங்கள் எப்போதும் நன்றியாய் இருக்கவேண்டும்; உலகில் சிரிப்பைக்கொண்டுவருவதாகிய ஓர் பதவி புகழ்ந்துபாராட்டத்தக்க ஒன்ருகும்" எனவங்கூறி அவர்களின் நண்பர்களுக்கென்று ஒருதொகையான செபமாலைகளை ஆசீர்வதித்துக் கொடுத்தார்.

### முத். டோமினிக் சவியோ

1885-ம்ஆண்டிலே ஓர்நாள் அர்ச். தொன்பொஸ்கோ ஒருகூட்டம்பையன்களுடன்நின்று அவர்களது நாமங்களின் சொற்பிறப்புகளைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருந்தார். அவர்களில் டொமினிக் சவியோ எனும் பாலியரும் ஒருவர். ஸ்ரீபின் என்பதின்அர்த்தம் "முடிசூடியவர்" என்றும், அன்ட்று என்பதன்அர்த்தம் "ஆண்மையிற் சிறந்தவர்" என்றும், பிலிப் என்பதன் அர்த்தம் "குதிரைகளை நேசிக்கிறவர்" என்றும் அவர்கூறினர். அப்போது டொமினிக் சவியோ சம்பாஷணையை இடையிலேகுழப்பினர். டொமினிக் எனும்நாமம் என்னத்தைக் கருதுகிறது என்று கேட்டார். டொமினிக்என்பது "கர்த்தருக்கு உரியவர்" என்பதைக் கருதுவதாகத் தொன்பொஸ்கோ கூறினர். "அப்போது நான் என்னை ஓர்அர்ச்சியசிஷ்டவனுக்கும்படி தங்களைக்கேட்பது முற்றிலும் சரியே" என்று டொமினிக் சவியே கூறினர். "ஏன் எனதுநாமந்தானே நான்கர்த்தருக்கு உரியவரென்று சொல்லுகின்றது; ஆகையால், நான்திவ்வியகர்த்தருக்கு உரியவராகவேண்டும்; முற்றும் அவருக்கே உரியவராகவேண்டும்; நான் ஒருஅர்ச்சியசிஷ்டவனுகவர ஆசிக்கிறேன். நான்அப்படியான ஒருவராய் வருகிறவரையிலே மனச்சந்தோஷமுடையவனுய் இருக்கமாட்டேன்" என்று திரும்பவும்கூறினர். 1857-ம்ஆண்டு பங்குனிமாதம் 9-ந்திகதி இளமையான 15 வயதிலே இப்பாலியர் இறந்தபோதிலும் பரிசுத்ததனத்தை அடையலாயினர். அர்ச். தொன்பொஸ்கோவின் மாணவருள் ஒருவராகிய இவருக்குப் பங்குனி மாசம் 5-ந்திகதி ஞாயிறுவாரம் அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்படவிருக்கிறது.

### வத்திக்கான் பத்திரிகை

"ஒசேர்வாத்தோறே ரோமானே" எனும் வத்திக்கான் தினவர்த்தமானி தற்போது அறுபதினுயிரம் பிரதிகள் வரையில் வெளியிடுகின்றது. இவற்றிலே அரைவாசி இத்தாலியிலே விலைப்படுகின்றன. எஞ்சியவைகள் பிரதானமாக உலகமுழுவதிலுமுள்ள குருமாரும், சந்நியாச, கன்னிகா ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களுமான சந்தாதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. இப்பத்திரிகை தனது 89 வருடசரித்திரத்திலே முதன்முறையாக ஆங்கில வாரவெளியீடொன்றையும் சமீபத்தில் பிரசுரஞ்செய்யவிருக்கின்றது. அடுத்தமூன்று மாசங்களுக்கிடையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இப்புதிய வாரவெளியீடு, உலகின்பிரதான தேசங்களுக்கு வத்திக்கான் செய்திகளை நேரே அனுப்பிவைக்குமாறு செய்யப்பட்டுள்ள நான்குபாஷைத் திட்டத்தில் ஓர்பகுதியாகும். பிராஞ்சிய வாரவெளியீடு சென்றமார்கழிமாதம் பிரசுரமாகத் தொடங்கியது. அடுத்தபடியாக ஸ்பானியவாரவெளியீடு பிரசுரமாகும். இது தென்னமெரிக்க நாடுகளில் பரக்கவிலைப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. பின்னர் ஜேர்மன் வெளியீடு பிரசுரமாகும்போலிருக்கிறது.

### 21-ம்ஆண்டு நிறைவுவிழா

வத்திக்கான் இராச்சியத்துக்கு அரசுச்சுதந்தர அந்தஸ்து அருளிய லத்தறன் உடன்படிக்கைநிறைவேறிய 21-ம் ஆண்டு நிறைவுவிழா சென்றமாசி மாதம் 11-ந் திகதி பாப்பரசின் இராச்சியத்திலும், இத்தாலிமுழுவதிலும் குதூகலமாகக் கொண்டாடப்படலாயிற்று. வத்திக்கான் பணியாளருக்கெல்லாம் அன்று விடுமுறை அருளப்படலாயிற்று. இத்தாலிய பகிரங்க கட்டிடங்களிலெல்லாம் பாப்பரசின்கொடியும், இத்தாலிய குடியரசுக்கொடியும் அக்கபக்கமாகஏற்றிப் பறக்கவிடப்பட்டிருந்தன. 1870-ம்ஆண்டு கறிபால்டியின் படைகள் பாப்பரசின்நாடுகளைக் கைப்பற்றியதைத்தொடர்ந்து பாப்பரசுக்கும் இத்தாலிக்குமிடையே ஏற்பட்டிருந்த 59 வருடப் பிணக்கை இந்தஉடன்படிக்கை ஓர்முடிவுக்குக் கொண்டுவரலாயிற்று.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், அர்ச். பாத்திமாமாதா, சங.அல்போன்சா சகோதரி மன்ருட்டாலும் என் கணவருக்கு வந்த இடுப்புவலி சுகமானதற்கு நன்றி செலுத்துகிறேம். தாமதத்திற்காக மன்னிப்புக் கேட்கிறேம்.

கொழும்பு L. L. Fernando

---

## இலங்கை வாலிபர்களுக்கு அசிசிநகர் அர்ச். பிரான்சீஸ்குவின் குரலொலி

பம்பாய்நகரில்தனதுதாய்மடத்தைக் கொண்டுள்ள அசிசிநகர் அர்ச். பிரான்சீஸ்குவின் சபையானது, இந்தியா, ஜேர்மனி, சுவிற்சர்லான்ட், இத்தாலி என்னும்நாடுகளில் கிளைச்சபைகளைக் கொண்டதாய், நூற்றுக்குமேற்பட்ட சந்நியாசிகளை அடக்கியதாய், அந்நாடுகளிலே, விசேஷமாக இந்தியாவிலே பல திசைகளிலும் திருச்சபைக்குஅத்தியாவசியமான முயற்சியில் ஈடுபட்டுவருகிறது என்பதை அறிவீர்கள். சபையின் நோக்கமும் வரலாறும் பின்வருமாறு:— முதலாவது, இந்தச் சபை வேதபோதகத்தையும், வேதப்பரப்புதலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பிறசமயத்தினரை அதிகமாகக் கொண்டுள்ள ஓர் கிராமத்தில் இச்சந்நியாசிகள் ஒருகுடிசையை ஸ்தாபித்துத் தங்கள்தேவதொண்டுகளை ஆரம்பிப்பர். குறைந்தது மூன்று சந்நியாசிகள் சேர்ந்துவாழ்ந்து அங்குள்ள பிறசமய மக்களுக்கு வியாதிக்குத்தகுந்தமருந்து கொடுத்தும், உணவுக்குவேண்டியதைக் கொடுத்துதவியும் அவர்களைச் சொந்த மக்களாகக் கருதிநடத்துவர். நாளாவட்டத்தில் சந்நியாசிகள்செய்யும் போதனைகளுடன்கூடிய சாதனைகளால் அவர்கள் முழுமனதுடன் திருச்சபையைத் தழுவவிரும்பினுல், ஞானஸ்நானத்திற்குவேண்டிய ஏற்பாடுசெய்து ஏறக்குறைய 50 குடும்பங்கள் திருச்சபையில் சேர்ந்தபிற்பாடு மேற்றிராணியாரின் அங்கீகாரத்துடன் அவர்களை ஓர் குருவானவரின் பாதுகாப்பில் கையளித்துவிட்டு வேறு இடங்களை நாடிச்செல்வர்.

இரண்டாவது, இந்தச்சபை இந்தியாவில் நாலுபாடசாலைகளைக் கொண்டுள்ளது. அவைகளில் கல்விகற்றுவருகிறவர்களில் பெரும்பான்மையோர் அனுதைப் பிள்ளைகளும், கோட்டிலே குற்றவாளிகளெனத் தீர்ப்பிடப்பட்ட பெற்ருேரற்றபிள்ளைகளுமாகும். இவர்கள் நாளடைவில் சந்நியாசிகளின் கண்காணிப்பிலே அறிவில் விருத்தியடைவதுடன் ஆத்தும ஈடேற்றத்தையும் அடைந்துகொள்ளுகிருர்கள் என்பதை யாவரும் கண்டறிவர். கடந்தசில வருடங்களுக்கிடையில் இந்தச்சந்நியாசிகளது கண்காணிப்பில்அனுதைகளாய் வளர்க்கப்பட்டவர்கள் மேன்மையான பதவியில் இருக்கிருர்கள்.

மூன்ருவது, இந்தச்சபை கைத்தொழிலை விர்த்திசெய்கிறது. தேயிலைத்தோட்டம், காப்பித்தோட்டம், நெல்வயல் ஆகியவற்றைப் பண்படுத்திப் பயன்பெறுவதுடன், இதனுல் அனுதைப்பிள்ளைகள் பிற்காலத்திலே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் சந்தோஷமாய்ச் சீவிப்பதற்கு ஓர் வழியும் காட்டுகிருர்கள்.

அதி சங். விறதர் லியோனட்அவர்களைத் தலைவராகக்கொண்டுள்ள இந்தச்சபை இதுகாலபரியந்தம் ஆற்றிய தொண்டுகள் மிகவும் பாராட்டத்தக்கன. இச்சபையில்சேர்ந்த சந்நியாசி ஒருவர் தனது ஆத்துமத்தையும், பிறர் ஆத்துமத்தையும் இரட்சிப்பதைவிடத் தன்னைத்தானே மோட்சபாதையில் நடப்பிக்கிருர்.

இலங்கைவாசிகளிலே இச்சபையில் சந்நியாசிகளாக இருப்பவர்கள் வெகுசிலர்என்பதை அறிந்து துக்கிக்கிருேம். நம் இலங்கையிலும் மனந்திரும்பவேண்டியவர்களாய் அநேகர் இருக்கின்றனர். அதனுல் இலங்கை வாசிகளாகிய நீங்கள் இச்சபையில் அதிகமாய்ச்சேர்ந்து எம் தாய்நாட்டிற்கு ஞானவெளிச்சமுண்டாகச் செய்வீர்களா? இலங்கையிலும் இப்படியான சபையுண்டாகி வேததேவ தொண்டுகள்செய்யும்படி எமது தலைவர் அதிகமாக ஆசிக்கிருர். ஆதலால் பொன்போலும் இத்தருணத்தை இழந்துவிடாது இன்றே முன்வருவீர். இதில் சேருபவர் பதினெட்டுவயதுக்கு மேற்பட்டும் முப்பதுவயதுக்குக் கீழ்ப்பட்டும் மணமாகாத வாலிபராயும், ஆங்கிலம ஜே. எஸ். சி. படித்துமுடித்தவர்களாயும் இருக்கவேண்டும். யேசுவுக்குத் தன்னைத்தான் முழுதும் ஒப்புக்கொடுக்கும் நன்மனதினராயும், உலகப்பற்று இல்லாதவராயும் இருக்கவேண்டும்.

விரும்புவோர் கீழ்காணும் விலாசத்திற்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். சபையைப்பற்றி விரிவாய் அறியஆசிப்போர் மேற்றிராணியார் மாளிகையில் சொற்ப காலத்திற்குத் தங்கியிருப்பவரும், பம்பாயிலிருந்துவந்தவரும் இந்தச் சபையைச்சேர்ந்தவருமான சங். விற. பேர்டினன்ட்அவர்களை வினவிக்கொள்ளலாம்.

அதி சங். விற. லியோனட்
(தலைவர்)
அர்ச். பிரான்சீஸ்குவின் மடம்
மவுண் பொயின்சர் பொறிவிலி
பம்பாய்

---

## தபசுகாலம்

தபசுகாலத்தில் வாசிக்கவேண்டிய ஞானவாசினைப் புஸ்தகங்களும், ஒப்பாரி, புலம்பல், அம்மானை, வியாகுல பிரசங்கம், செபப்புஸ்தகங்கள் முதலியனவும்—சுரூபம், செபமாலை, குருசு, வரவணிக்கம், தூபவர்க்கம் முதலியனவும் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன. —வீ. பீ. ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும். வியாபாரிகளுக்கும், தொகையாகப் புஸ்தகங்கள் வாங்குவோருக்கும் விசேஷகழிவு கொடுக்கப்படும்.

ம. வஸ்தியாம்பிள்ளை அன் சன்ஸ்
பிரபலபுத்தகவியாபாரிகள்
பெரியதெரு—யாழ்ப்பாணம்.

---

## இந்திய மேற்றிராணிமார்களின் பொதுநிருபம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வும், தேசத்தின் நன்மைக்காகவும் வருந்தி உழைத்துக்கொண்டுவாருங்கள்.

நமதுபரிசுத்ததேவதாய், அர்ச். தோமையார், அர்ச். சவேரியார் இவர்களுடைய மன்ருட்டுகளின்மூலமாய்ச் சருவேசுரன் உங்களைவிசுவாசத்தில் உறுதிப்படுத்திக் கண்காணித்துவரும்படி பிரார்த்திக்கிருேம். இத்தோடு தந்தைக்குரியஅன்போடு உங்களெல்லோருக்கும் எமதுஆசீர்வாதத்தையும் அளிக்கிருேம்.

பங்களூரில், 1950-ம்வருஷம் தை மாதம் 18-ந்திகதி இந்தநிருபத்தை எழுதித்தந்தோம்.

அகிலஇந்திய பூரணசங்கத்தில்கூடிய அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும், அப்போஸ்தொலிக்க பரிபாலகர்களும்.

---

## நேர்த்தியின் பூர்த்தி

50 ரூபா பெறுமதியான ஒருபொருளை இழந்து இரண்டு மூன்று கிழமைகளாகத் தேடியும் காணுது கடைசியாகக் கோடி அற்புதராகிய அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினுல் புதுமையாகக் கண்டடைந்தேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

வங்காலை A. T. R. D.

---

## பரீட்சையிற் சித்தி

யேசுவின் திருஇருதயத்திடமும், சகல வரப்பிரசாதங்களின்தாயான பொம்பேயி மாதாவிடமும், அர்ச். சவேரியார், அர்ச். அந்தோனியார், அர்ச். றீத்தம்மாள், மற்றும்சகல அர்ச்சியசிஷ்டர்களிடமும், சங. அல்போன்சா கன்னிகையிடமும் எனது 'என்றன்ஸ்' பரீட்சையிற் சித்தி கிடைக்குமாறு வேண்டினேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

Amirthavathi Muruges

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### பரிசுத்தவருட திருயாத்திரை

இலங்கைக் கத்தோலிக்கரின் பரிசுத்தவருட றோமாபுரித் தேசிய திருயாத்திரைக்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன. 12 குருமாரும், 1 கிறிஸ்தியன்விறதரும், 4 கன்னியாஸ்திரிமாரும், 138 பெண்மணிகளும், 95 ஆடவர்களும், 3 பிள்ளைகளும் அடங்கிய 253 யாத்திரிகர் நிகழும் பங்குனிமாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை எஸ். எஸ். சிறெனியா எனும் கப்பலிலே கொழும்பிலிருந்து நேப்பிள்ஸ் நகருக்குப் பிரயாணமாவார்கள். கொழும்பு அதிமேற்றிராசன விக்கார் ஜெனறலாகிய மிகவண. ஜி. போட்ரின் சுவாமியவர்கள் இந்த யாத்திரைக்குத் தலைமைவகித்துச்செல்வார். யாத்திரிகர் கப்பலில்பிரயாணப்படுமுன் யாத்திரைக்கு ஆயத்தமாகக் கொழும்பிலே ஒருதொகையான வேதானுசார பத்திமுயற்சிகளில் கலந்துகொள்வார்கள். சித்திரைமாதம் 18-ந் திகதி இவர்கள் நேப்பிள்ஸ்நகர்சேர்ந்து நேரே றோமாபுரிசென்று அங்கு ஒருவாரம் தங்கியபின் அசிசி, புளோறென்ஸ், பதுவா, வெனிஸ், மிலான், லூர்துபதி, பரீஸ், லண்டன் ஆதியன க்ண்டு திரும்புவார்கள். லண்டனிலிருந்து இவர்கள் திரும்பிவருதற்கான பிரயாணத்தை ஒரேகப்பலிற்தானே வசதிபண்ணுவதில் கஷ்டம் ஏற்பட்டிருப்பதால் இவர்கள் மூன்றுகோஷ்டிகளாகப் பிரிக்கப்பெற்று மூன்று கப்பல்களிலே இலங்கைவந்து சேருவார்கள். இவர்கள் திரும்ப வைகாசிமாத இறுதியில் வந்துசேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### நெல்வயல் வரிநீக்கம்

ஊர்காவற்றுறைப்பட்டினசங்க எல்லைக்குள் அடங்கிய நெல்வயல்களிலே நெற்பயிர்கள் இம்முறைமுற்றாகச் சேதமடைந்திருப்பதையிட்டு இவ்வருடம் அவ்வயல்களுக்கு வரி அறவிடுவதில்லையெனப் பட்டினசங்கம் சென்றவியாழக்கிழமை தனது மாதாந்த கூட்டத்திலே தீர்மானித்திருக்கிறது. இந்தவரி நீக்கத்தால் பட்டினவருமானத்துக்கு ஏற்படும்நஷ்டம் இலங்கையின் ஏனைய இடங்களிற்போன்று பாபர்சலூன்களுக்கு வரிவிதித்து நிவிர்த்திசெய்யப்படவிருக்கிறது.

### முதல் மாணதண்டனை

யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே சாவகச்சேரியைச்சேர்ந்த நாவற்காட்டு வாசியான முருகன் கணபதி அல்லது சின்னப்பொடியன் என்பவன் அதே கிராமத்தைச்சேர்ந்த இராமூஎனும் கடைக்காரனைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றானெனத் தொடரப்பட்டிருந்த வழக்கு விசாரணைக்குவந்து எதிரி குற்றவாளியாகி மாணதண்டனை விதிக்கப்படலாயினன். தற்போது நடைபெற்றுவரும் யாழ்ப்பாணச்சுப்பிறீங் கோட்டில் விதிக்கப்பட்டுள்ள முதல் மாணதண்டனை இதுவாகும்.

### வரவேற்பு உபசாரம்

யாழ்ப்பாணம், பரிசுத்த கார்மேல் மாதாகூட்டச்சாலையிலே சென்றமாதம் 12-ந்திகதிநடைபெற்ற வரவேற்புஉபசாரம் அசிசிநகர் அர்ச். பிரான்சீஸ்குவின் சபையைச் சேர்ந்த சங். விறதர் பேடினன்ட் சூஸைநாதர் அவர்களுக்கேஎன்க.

### பாப்பரசருக்கு அன்பளிப்பு

சிறெனியா எனுங்கப்பலிலே இம்மாசம் 30-ந் திகதி கொழும்பிலிருந்து றோமாபுரிக்குப் பிரயாணமாகவிருக்கின்ற பரிசுத்தவருட யாத்திரிகர் தங்கமும், யானைத்தந்தமும் உட்புறத்தில் பதித்து இலங்கைமாதிரியான சித்திர வேலைப்பாடுடையதாய்ச்செய்யப்பெற்ற ஓர் வெள்ளிப்பேழையைப் பரிசுத்த பாப்பரசருக்கு அன்பளிப்புச்செய்யவிருக்கின்றார்கள். அழகிய இந்தப் பேழை 1949-ம் ஆண்டு கொழும்பில் நடந்தேறிய கலைவிழாவில் தங்கமெடல் பரிசுபெற்றுள்ளது. இதனை அத்துணை விசித்திர வேலைப்பாடுடையதாய்ச் செய்தவர்கள் கொழும்பிலுள்ள ஹேமச்சந்திர பிறதேர்ஸ் கம்பெனியாரே.

### பிரதம நீதியாசர்

இலங்கைப் பிரதம நீதியரசராய் இருந்துவருகிறவரான சேர் ஆர்தர் விஜயவர்த்தன, கே. சி. அவர்கள் இம்மாதம் 20-ந் திகதியன்று தமது உத்தியோகபதவியிலிருந்து இளைப்பாறுகின்றார். அதனால் இவரிடமாகப் பிரதம உபநீதியரசரான சங். ஈ. ஜி. பி. ஜயதிலக கே. சி. அவர்கள் பிரதமநீதியரசராகக் கவர்னர்–ஜெனறலால் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். இவர் முன்னே அற்றேணி ஜெனறலாகவும், சொலிசிற்றர் ஜெனறலாகவும் கடமை பார்த்துவந்து 1947-ம் ஆண்டு சுப்பிறீங்கோட்டு உபநீதியரசர்களில் ஒருவராக நியமனம்பெற்றார். ஐக்றிங் பிரதம நீதியரசராகவும் இவர் கடமைபார்த்திருக்கின்றார். இம்மாதம் 21-ந் திகதி இவர் தமபுதியபதவியைப் பொறுப்பேற்று நடத்துவார்.

### சிங்கள வைத்தியம்

சுதேச வைத்திய முறையிலே "சிங்கள வைத்தியம்" என்பதை நவமாகக் கொணர்ந்து புகுத்துவதையிட்டு இலங்கையிலுள்ள சுதேச வைத்தியர்களில் பெருந்தொகையானோர் பலமாக எதிர்க்கத்தொடங்கியிருக்கின்றனர். தற்போது இலங்கை வைத்தியத்தில் ஆயுர்வேத, சித்த, யூனானி எனமூன்று முறைகளேயிருக்கின்றன. இலங்கையிலே சுதேசவைத்தியத்தின் முழுச் சரித்திரத்திலும் 'சிங்கள' என்ற முறை முற்றுமே அறியப்படாதவொன்றாகக் குறித்துக் காட்டப்பட்டிருக்கிறது. தற்காலவைத்தியமுறையின் மூலாதார புராதனவைத்தியநூல்களுள் எதிலாவது அதுகாணப்படவில்லை. அதனால் சிங்களவைத்தியம்என்பதையும் புகுத்துவதானது மேலும் சுதேசவைத்தியத்தில் பல பிரிவுகளையும், தாறுமாறுகளையும் உண்டுபண்ணுமென்றே அவர்கள் பெரிதும்அஞ்சுகின்றார்கள்.

### வைத்தியர்களின முறையீடு

தெகிவலை-லவீனியமலை வைத்திய சமாஜத்தின் தூதுக்கோஷ்டியொன்று சென்ற 1-ந்திகதி சுகாதாரமந்திரியாரைப் பேட்டிகண்டு ஆயுர்வேதவைத்தியர்களைப் பதிவுசெய்வதையிட்டும், இலங்கையிலே அபின்குறைவையிட்டும் அவருக்குமுறையீடுசெய்துகொண்டது. மந்திரியார் மறுமொழியாக, எந்தஒரு ஆயுர்வேதவைத்தியருக்கும் எந்தவிதமான தீங்குமில்லாமலே ஆயுர்வேத வைத்தியர்களின்பதிவு நடத்தப்படும்; பத்துவருடகாலம வைத்தியஞ் செய்துவந்திருக்கும் சகலஆயுர்வேத வைத்தியர்களின தும்நிலைமைபற்றிஆராயும்பொருட்டு ஒருசகம்மிற்றி நியமிக்கப்படும்; இந்தியாவிலிருந்து தேவைக்குப்போதியதொகையான அபின் பெறுவதற்குக் கூடியவிரைவில் முயற்சி எடுக்கபபடுமெனக் கூறலாயினர்.

### தேசீயக்கொடித் தீர்மானம்

தேசீயக்கொடிக்கம்மிற்றியால் சிபாரிசுசெய்யப்பெற்ற தேசீயக்கொடியானது, யாழ்ப்பாணநகரமண்டப முன்றிலில் சென்ற 1-ந்திகதியன்று மாலை பெருந்திரளாகக்கூடிய தமிழ்க்காங்கிரஸ்அங்கத்தினர்கள், மற்றும்அனுதாபிகளின் பெருங்கூட்டத்திலே அங்கீகரிக்கப்படலாயிற்று. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்அவர்கள் கூட்டத்துக்குத் தலைமைவகித்தனர். தமிழ்க்காங்கிரஸின் சரித்திரத்திலே முதன்முறையாகப் பாராளுமன்றத்திலுள்ள முஸ்லீம்அங்கத்தினர்களான முதலியார் எம். எஸ். காரியப்பர், திரு. எச். எஸ். இஸ்மெயில், திரு. எம். எம். இபிறாஹிம், திரு. ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் என்பவர்கள் [illegible] தார்கள். ஏனைய பாராளுமன்ற அங்கத்தினர்களாய்த் திரு. வி. நல்லையா, திரு. கே. கனகரத்தினம், திரு. ரி. இராமலிங்கம், திரு. வி. குமாரசாமி, திரு. அல்பிறெட் தம்பிஐயா என்பவர்கள் சமூகமாயிருந்தார்கள்.

### கொள்ளை-கொலைவழக்கு

இலங்கைமுழுவதும் பெரும் அருட்சியைத் தந்துகொண்டிருந்த கொழும்புக் குதிரைப்பந்தையக் கிளப்கொள்ளை-கொலைவழக்குவிசாரணை சென்றவியாழக்கிழமை முடிபுக்குவந்து ஐந்தாம், ஆறும், ஏழாம், எட்டாம் எதிரிகளான எம். விஜயதாச பெறேரா, வார்லிஸ் முனசிங்க, எம். ஏ. ஜேம்ஸ் செனவிரத்தின, ஜே. பி. இராசபக்ஸ எனும் நால்வரும் கொலைச் சதிபண்ணியதில் குற்றவாளிகளாகி மாணதண்டனைவிதிக்கப்பட்டனர். இவர்கள்முறையே: பங்குனிமாதம் 31, சித்திரை 1, சித்திரை 4, சித்திரை 5 எனும்திகதிகளில் தூக்கிவிடப்படுவார்கள். இரண்டாம் எதிரியும், ஓர்கார்சாரதியுமான எம். கே. வில்சன் கொள்ளையடிக்கத் தான்சதி செய்ததாக ஏலவே ஒப்புக்கொண்டதின் பேரில் பத்துவருடக்கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டனன். முதலாம்எதிரியும், கிளப்வான்சாரதியுமான ஜில்பேட் டயஸ் எதிலும் குற்றவாளியல்லவென்று தீர்க்கப்பட்டு விடுதலையடைந்தனன். மூன்றாம்எதிரியான லூயிஸ் டயஸ், நான்காம்எதிரியான சைமன் ஜயசிங்க எனும் இருவரும் விசாரணைநடுவில் சுத்தவாளிகளாகக் கண்டு விடுதலைசெய்யப்பட்டார்கள். பிரதமநீதியரசரான சேர்ஆர்தர் விஜயவர்த்தன அவர்களே இவ்வழக்கை விசாரணைசெய்தனர். இவ்விசாரணை தைமாசம் 24-ந்திகதி ஆரம்பமாகி 25 தினங்களாக விசாரணைசெய்யப்படலாயிற்று. 102 சாட்சிகள் விளங்கப்பட்டார்கள். மாணதண்டனைபெற்ற நால்வரும் கொள்ளையிடச் சதிசெய்ததிலும் குற்றவாளிகளாகித் தலைக்குப் பத்துவருடக் கடூழிய சிறைத்தண்டனைபெற்றார்களெனினும், மாணதண்டனையையிட்டுச் சிறைத்தண்டனை நீக்கப்படலாயிற்று.

### 20.000 ரூபா வெகுமானம்

கொழும்பு, குதிரைப்பந்தயக் கிளப் கொள்ளை-கொலைவழக்கிலே எதிரிகளைக் கைதுசெய்யுபபடியாக முதற்தகவல்கொடுத்த 18 வயசுடைய ஓர்வாலிபருக்குப் பொலிஸ்பகுதி 20,000ரூபா வெகுமானம அளிக்கவிருப்பதாகச் சென்றசெவ்வாய்க்கிழமை இராசகிரியாவில் நடந்தேறிய ஓர்பாடசாலைப்பரிசளிப்புவிழாவிலே கொழும்பு உதவிப் பொலிஸ் சுப்பிறின்ரெண்டனாகிய திரு: லையனல் குணதிலக அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

### அக்கரைப்பற்றுத் தவறணைகள்

அக்கரைப்பற்றுப் பட்டினத்தில் இருந்துவரும் கள், சாராயத்தவறணைகளை நீக்கும்விஷயமாய்ச் சென்றவாரம் சனசம்மதி கேட்கப்பட்டுப் பட்டின வாசிகளில் நூற்றுக்கு 82 விகிதமானோர் அவற்றின் நீக்கத்துக்காகச் சீட்டுப்போட்டனர். அதனால் வருகிறஜப்பசிமாசமுதல் இந்தத்தவறணைகள் நீக்கப்படவிருக்கின்றன. அப்பகுதிப் பாராளுமன்ற அங்கத்தவரான முதலியார் எம். எம். இபிறாஹிம்அவர்கள் இதுவிஷயமாய் விசேஷமுயற்சி எடுத்துக்கொள்ளலாயினர்என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### இந்திய பருத்திநூல்

இந்திய-இலங்கைவர்த்தக உடன்படிக்கையின் விளைவாய் நிகழும்1950-ம் ஆண்டிலே இந்தியாவிலிருந்து 13 லட்சம் றாத்தல் பருத்திநூலும், 4 லட்சம் தொன் நிலக்கரியும், மற்றும் வெங்காயம், மிளகாய்ஆதியனவும் இலங்கை பெறவிருக்கிறது. இந்தியநிலக்கரி மிக மலிவாய்இருப்பதாலே இலங்கை றெயில்வேக்கு அதனால் அநேக லட்சக்கணக்கான ரூபாக்கள் மிஞ்சுமென்றும், இந்தியபருத்திநூலே உலகில் அதிகம் மலிவானதாய்இருப்பதால் அதுகொண்டு புடவைகள்நெய்து அதிகம்மலிவானவிலையிலே அவைகளை விற்கமுடியுமென்றும் சொல்லப்படுகிறது. மேலும் இந்தியவெங்காயமும் மிளகாயும் குணத்தில் சிறந்தனவாயும் விலையில்குறைந்தனவாயும் இருப்பதால் இந்திய-இலங்கைவர்த்தக உடன்படிக்கையானது உணவு, உடைஆதியவைகளை மலிவாகவிற்க வாய்ப்பாகுமென்று வியாபாரிகள் கூறுகின்றார்கள்.

### மோட்டர்சைக்கிள் றிக்ஷோ

கொழும்புநகரிலே தற்போது லைசென்ஸ்பெற்ற 2,137 றிக்ஷோக்களும், லைசென்ஸ்பெற்ற 2,471 றிக்ஷோக்காரரும் இருப்பதாகத் தெரியவருகிறது. ஆனால், றிக்ஷோக்களில் மனிதரைவைத்து மனிதர் இழுப்பது மனுத்தன்மைக்குமாறான ஓர் செயலாய் இருப்பதால் கொழும்புநகரிலிருந்து றிக்ஷோக்களை ஒழித்துவிடவேண்டுமெனக் கொழும்புநகரசங்க பிரயாணக் கமிற்றி சிபாரிசுபண்ணியுள்ளது. அதனால் அவற்றினிடமாக நூறுமோட்டார்சைக்கிள் றிக்ஷோக்களைத் தருவிப்பதுவிஷபமாய் நகரசங்கம் ஆலோசிக்கவிருக்கிறது. ஒருமோட்டர்சைக்கிள்றிக்ஷோவிலை 3,000 ரூபாவுக்கு மேற்படமாட்டாதாம். அதனால் நூறு றிக்ஷோக்கள் வாங்க மூன்றுலட்சம் ரூபா செலவுபிடிக்குமாம். இவைஒவ்வொன்றும் 2 பேரை ஏற்றிச்செல்லத்தக்கது. இவற்றிலே பிரயாணஞ் செய்யஏற்படுஞ்செலவும் மிகக் குறைவானதாம்.

### மத்திய அரசியற்கட்சி

ஐக்கியதேசீயக்கட்சியையும், இடதுசாரிக்கட்சிகளையும் எதிர்த்து ஓர் சுயேச்சையான ஸ்தாபனமாகச் செயலாற்றுதற்கென்று மத்தியஅரசியற்கட்சிஒன்றை ஆக்குவதற்கு வழக்கறிஞர்கள்சேர்ந்து ஆலோசித்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இக்கட்சியின் ஒருநோக்கம், தற்போதைய அரசாங்கத்தின் வீண்செலவுகளையும், சனநாயகமற்ற வழிமுறைகளையும் எதிர்ப்பதெனத் தெரியவருகிறது.

### யாத்திரை பஸ்விபத்து

சிவனொளிபாதமலைக்குப் பஸ்ஒன்று யாத்திரிகரைஏற்றிச் சென்றுகொண்டிருந்தபோது சென்றவெள்ளிக்கிழமை கிரியெல்லஎனுமிடத்திலே பாதையைவிட்டு ஓர்பக்கமாய்ச்சரிந்து 25 அடி ஆழமான ஓர்பள்ளத்தில்வீழ்ந்து விபத்துக்குள்ளாயிற்று. அதிற்சென்றதாகச் சொல்லப்படும் 49 யாத்திரிகரில் 35 பேர் காயமடைந்தார்கள். அவர்களில் இருவருக்குக் கடுமையானகாயம் ஏற்படலாயிற்று. காயமடைந்தவர்கள் உடனேதானே இரத்தினபுரிஆஸ்பத்திரிக்குப் பொலிசரால் அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதயத்தின் கிருபையாலும் பரிசுத்த கன்னித்தாயின் மன்றாட்டினாலும் கடந்த எனது பரீட்சைஒன்றில் தேறியதற்காகவும், எனது நெஞ்சுவலி நீங்கியதற்காகவும், இன்னும் நான் பெற்றுக்கொண்ட சகலநன்மைகளுக்காகவும்இரக்கம் நிறைந்த தேவனுக்கு நன்றி. பிரசுரதாமதத்திற்கு அன்பின் யேசுவிடம் மன்னிப்பைக் கோருகின்றேன்.

கண்டி S. G.

---

### நேர்த்தியின் பூர்த்தி

எனது மகனுக்குப் பலமாதங்களாக இருந்துவரும் இருமலும் மற்றும் தொண்டையைப்பற்றிய நோய்களும் பலவைத்தியர்களின் பராமரிப்பால் குணமடையாததுகண்டு, சங். அல்போன்சா சகோதரியின் உதவியை நாடினேன். அவவின் உதவியால் இப்போ சுகமடைந்துவருகிறார். இன்னும் பூரணசுகம் கிடைக்குமென நம்பியிருக்கிறேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

Mrs. W. A. M. Tamel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தப்பசுகால ஆயர்நிருபம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி )

தலின்படி, "நீங்களேசீர்கேட்டிலிருந்து மனிதரைக் காக்கும் உலகத்தின் உப்பாயும், அவர்களுக்கு இரட்சணியத்தின் வழியைக்காட்டும்ஒளியாயும்" இருக்கின்றீர்கள். இன்றையஉலகத்தை முன்னெருபோதும் இல்லாதவிதமாய்ச் சீவியத்தின்சீர்கெட்ட வழிமுறைகளின் கவர்ச்சியில்இருந்தும்—பொய்க்கொள்கைகளின் கவர்ச்சியில்இருந்தும்காப்பாற்றவேண்டும். முன்னெருபோதும் இல்லாதவிதமாய் அந்தகாரத்தில் நின்றுநீங்கி வழியைக் காணுவதற்கு இன்று வெளிச்சம்வேண்டும். இந்தவெளிச்சத்தைச் சொல்லினல்மாத்திரமல்ல,நமது சீவியத்தின் முன்மாதிரியாலும் கொடுக்கவேண்டும். இந்தமுன்மாதிரியும் ஓர்விசேஷ முன்மாதிரியாய் இருக்கவேண்டும். காலம் விசேஷமாய்இருப்பதால் விசேஷவழிவகைகள் அவசியம். நாம்கொடுக்கும்வெளிச்சம் இப்போதுள்ள சீர்கெட்ட சீவியமுறைகளாகிய மேகங்களையும் மூடுபனியையும் ஊடறுத்துப்பிரகாசிக்கவேண்டுமேயாகில் அது ஓர்விசேஷவெளிச்சமாய் இருக்கவேண்டும். நமதுவெளிச்சம் இந்தப்பரிசுத்தவருடத்தில் தெளிவாய்ப் பிரகாசிக்கும்படி மிகவும் கவனமாய்இருப்போம். 10-ம் பத்திநாதராகிய பாப்பரசர் தமது குருத்துவவெள்ளியுபிலிக்காலத்தில் முழுஉலகத்தின் குருமாரையும் உற்சாகப்படுத்தினர் நாமும்உங்களை அவர்வார்த்தைகளைக்கொண்டே உற்சாகப்படுத்துகின்றேம். அவர்வார்த்தைகள் இந்தவேளைக்குப் பொருத்தமானவை. அவைபின்வருவன:- "சருவேசுரனின் அளவிடக்கூடாத திட்டங்களின்படி எவ்விதகாலநிலையில் திருச்சபை இருக்கின்றதென்றுஉலகத்தின் எப்பகுதிகளிலுமுள்ள நீங்கள் எல்லோரும் காண்கிறீர்கள். அதனுடைய தொல்லைகளில் அதற்குஉதவியும், துணையும் புரியும்படி தெண்டிப்பதற்காக உங்களுக்குரியதொழில் எவ்வளவு பரிசுத்தமானது என்றதைக் கவனித்துத் தியானியுங்கள். ஏனெனில், அவரிடமிருந்து நீங்கள்பெற்றிருக்கும் அதிகாரம் பெரியது. எக்காலத்தைப்பார்க்கிலும் இக்காலத்தில்தான் குருமார் விசேஷபுண்ணியங்களால் நிறைந்தவர்களாய் இருத்தல் அவசியம். அவர்கள்முன்மாதிரிகையில் சிறந்தவர்களாய், விழிப்புள்ளவர்களாய், முயற்சிஉள்ளவர்களாய், கிறீஸ்துநாதருக்காகப் பெருங்காரியங்களைச் செய்யவும், அவைகளின் நிமித்தம் வருந்தவும் வெகுஆயத்தம்உள்ளவர்களாய் இருத்தல்வேண்டும்.

(தொடரும்)

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சங். அல்போன்சா கன்னிகையிடம் நான் கேட்டுக்கொண்ட மன்றாட்டுக் குறித்தகாலத்துட் கிடைத்தது. நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன். அவ வின்நாமம் புகழப்படுவதாக.

M. M.

## மாணவரின் சுற்றுப்பிரயாணம்

"நவசிபி"

புத்தளத்தைச்சேர்ந்த நரக்களிக் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களுமாக 30 பேரைக்கொண்ட ஓர் கோஷ்டியினர் சாஸ்திர, சரித்திர சம்பந்தமாய்த் தாங்கள் கற்றறிந்தவிஷயங்களை அனுபவ ரீதியாய் நேரில்கண்டறியும் நோக்கமாகப் 15-2-50 காலை 7மணியளவிலே பஸ்ஒன்றில் புறப்பட்டுச் செவிக்கினிய செந்தமிழ்க்கீதங்களை இசைத்த வண்ணம் புத்தளம், கொட்டுக்கச்சிய அரசாங்க விவசாயப்பண்ணை, ஆனைமடு, நிக்காவாத்தியா முதலாமிடங்களைப் பார்வையிட்டுப் பகல் 11 மணிக்குக் குருநாகல் போய்ச்சேர்ந்தனர். அங்கு அர்ச். அந்தோனியார்கோவில் மைதானத்திலே பகற்போசனம் புசித்துச் சற்று இளைப்பாறியபின் அப்பட்டினத்தின் பலபாகங்களையும், எட்டுக்காலமலையையும் சுற்றிப்பார்த்துவிட்டு, இருமருங்கும் விசாலமான தென்னந்தோப்புகளையுடைய பாதையினூடாகப் பயணஞ்செய்து பிற்பகல் 4 மணிக்குப் பொல்காவலையை அடைந்தனர். அங்கு அர்ச். பெர்னதேத் கல்லூரிக் கட்டிடநிதிக்கெனப் பங்குக் குரவர் வண. மேர்வின் பீரிஸ் சுவாமியவர்களின் முயற்சியால் சிறப்பான முறையில் நடைபெற்ற பொருட்காட்சியைப் பார்த்துக்கொண்டு அவர் சித்தஞ்செய்திருந்த சிற்றுண்டி, பேருண்டிகளைப் புசித்துக் கல்லூரிக்கட்டிடம் ஒன்றிலே இராப்பொழுதைக் கழித்தனர்.

பின்னர் 16-ந் திகதிகாலை 4 மணிக்கு எழுந்து காலைப்பூசை கண்டதும் கொழும்புமாநகரைநோக்கிப் பிரயாணமாகிச் செழுமையும் கொழுமையும் நிறைந்த செந்நெற் களனிகள், பள்ளத்தாக்குகள், பீடபூமிகள், தென்னந்தோப்புகளை அடக்கிய இயற்கைக் காட்சிகளையும், அளவ்வை, வறக்காப்பொலை, மினுவாங்கொடை, கம்பகா, கிறியுல்ல, களனியா முதலாம் இடங்களையும் கண்டுகளித்து விக்ரோறியாப் பாலத்தினூடாகக் கொழும்புமா நகருக்குள் பிரவேசித்தனர். அங்கிருந்து தெகிவலை மிருகக்காட்சிச்சாலை, இரத்மலானை விமானநிலையம், பின்னர் கப்பற்துறைமுகம், புதினவீடு, பாராளுமன்றம், இராணிமாளிகை, பெரிய தபாற்கந்தோர், கோட்டைப் புகையிரதநிலயம், மீன்மரக்கறிச்சந்தைகள், லேக்ஹவுஸ், காலிமுக மைதானம் முதலாம் பிரபல தலங்களையும், கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் கோவில், கொட்டாஞ்சேனை சந்தலூசியா ஆசனக்கோவில் முதலாம் தேவாலயங்களையும் சுற்றிப்பார்த்துக்கொண்டு பகல் 12 மணிக்குப் பம்பலப்பிட்டியிலுள்ள திருக்குடும்ப கன்னிகாமடத்தையடைந்தனர். அங்கு சங். கன்னிகாஸ்திரிமார் தயாரித்திருந்த பகல் போசனத்தை உண்டு களைப்பாறியபின், பிற்பகல் 2 மணியளவில் பிரயாணமாகி ஜாயெலையிலுள்ள பிரபல செல்வவந்தர் திரு. எஸ். எவ். பொன்சேக்காஅவர்களின் வாசஸ்தலத்தைச் சேர்ந்து அன்னாரின் சிற்றுண்டிஉபசாரணைபெற்று, அப்பால் நீர்கொழும்பு நகரைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு 6 மணிக்கு ஏத்துக்கால் பகுதிப் பிரபல புகையிலைவர்த்தகர் திரு. மரியான் கோமிஸ்அவர்கள் தயாரித்திருந்த சம்பிரமவிருந்தருந்தியபின் அங்கேயே தரித்து நித்திரைசெய்தபின் 17-ந்திகதி அதிகாலை எழுந்து பயணமாயினர்.

காலை 8 மணிக்கு நாத்தாண்டியாவிலுள்ள பீங்கான் கோப்பைத் தொழிற்சாலையைப் பார்வையிட்டபின், மாருவிலுள்ள அறையுண்ட புதுமையான சுரூபத்தைத் தரிசித்துப் பிரார்த்தனை செய்துகொண்டு, சலாபநகரையடைந்து அதன் பலபாகங்களையும் பார்த்துவிட்டுப் பகல் 11 மணிக்குத் தெதுறுஓயாவைச் சேர்ந்து குதூகலமாக அதில்நீராடியபின் பாடசாலைப் பிரதமஆசிரியர் திரு. எம். நீ. லெம்பட் அவர்கள்பொறுப்பில் சித்தஞ்செய்யப்பட்டிருந்த மதியவிருந்தைப் பந்தியமர்ந்து அருந்தினர். இவ்விருந்திற்குக் கோட்டைப்பிட்டி, கருக்குப்பனைக் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலைகளின் ஆசிரியர்களும், அப்பகுதிக் கிராமத் தலைமைக்காரர் உட்பட அநேகபெரியார்களும் சமுகமளித்திருந்தனர். பின்னர் ஆசிரியர்களான திரு. எஸ். டபிள்யு. விஜயசிங்கம், திரு. டபிள்யு. எலியாஸ் லோங் என்பவர்கள் நரக்களிப் பாடசாலையின் முன்னேற்றத்தை வியந்து பாராட்டினர். அப்பாடசாலை ஆசிரியர்களுள் ஒருவரான திரு. வி. எஸ். பிள்ளையவர்கள் இச்சுற்றுப்பிரயாண செலவிற்கெனக் கூடியதொகையானபணத்தைத் தந்துதவிய திருவாளர்கள் ஏ. பி. கிருசியான் (றெயிஸ்ருர்), அல்பேட் ஜோசப் (வி. சி. மெம்பர்), அ. வெனடிக்ற் ஆகியோர்க்கும், தெதுறுஓயா விருந்திற்குச் சமுகமளித்த பெரியார்கட்கும் நன்றித்துதி கூறினர். பின்னர் புத்தளமார்க்கமாகப் பாலாவிஉப்பளத்தையும்பார்வையிட்டுக்கொண்டு மாலை 6 மணியளவில் தங்கள் பாடசாலைவந்து சேர்ந்ததும் மூன்றுநாள் சுற்றுப்பிரயாணம் சுபமே முடிவுற்றது.

## தேவை

### மீன்பிடி பலகைவள்ளம்

சுமார் 36 அடி நீளமும், 4 அடி 4 அங்குல அகலமும், 2 அடி 6 அங்குல உயரமும் உள்ள ஒரு மீன்பிடி பலகை வள்ளம் விலைக்குத் தேவையாயிருக்கிறது. பாவித்த வள்ளமாயிருந்தாலும் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.

விற்கவிரும்புவோர் என்னவிலை, என்ன மரத்தாற் செய்யப்பட்டது, பாவிக்கப் பட்டகாலம், அதைப்பார்வையிடக்கூடிய இடம் முதலிய சகலவிபரங்களுடன் 1950-ம்ஆண்டு மார்ச்மாதம் 30-ந்திகதிக்குள் மீன்துறை இலாகாத்தலைவர், தபால்பெட்டி 531, கொழும்பு என்ற விலாசத்துக்கு அறிவிக்கவேண்டும்.

இ. ஆர். ஏ. டி சில்வா
தற்காலீக தலைவர்,
மீன்துறை இலாகா

மீன்துறை இலாகா,
கொழும்பு, 1-3-1950.

### மரியாயின்மாசற்ற இருதயம் ஜெயம்பெறுவதாக!

பரிசுத்த பாத்திமாநாயகியின் மாசற்ற இருதயத்தின் அனுக்கிரகத்தினல் எங்கள் குடும்பத்திற்கு நேர்ந்த பல இன்னல்கள் பரிதிமுன் பனிபோல் மறைந்துபோயின. இதைவாசிக்கும் அன்பர்களும் அந்த மாசற்ற இருதயத்தையே தங்கட்கு உறுதுணையாகக்கொள்ளுமாறு கோருகின்றேம்.

Mr. & Mrs Samuel
இளைப்பாறிய ஆசிரியர்கள்
'நவரட்ண வில்லா"
பண்டத்தரிப்பு

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

கடந்த 1949-ம் ஆண்டு புரட்டாசி மாதம் சங். அல்போன்சா கன்னியாஸ்திரியில் கொண்டுள்ள பத்தி நம்பிக்கையினல், இராசமுருக்கின் குரலொலியாகிய அவவின்படத்தை என் படுக்கை அறையில் வைத்துத் தினமும் நான் என் கருத்துக்காக ஜெபித்துவந்தேன். அடுத்த ஐப்பசிமாதமே நேர்த்தி பூர்த்தியாயிற்று. எனது நேர்த்திப்படி இஃதைப் பாதுகாவலனில் பிரசுரிக்கிறேன். அவவின் அருள் அனைவருக்கும் அள்ளி வீசப்படுவதாக!

ஐ. விக்ரோறியா
அம்பலப்புலம்

## பல்லழகின்றேல் அழகேது?

பற்களைச்சுத்தமாகவைத்துக்கொள்ள நம்நாட்டுமக்கள் பின்பற்றக்கூடிய சீரானமுறையொன்றை வகுப்பது பல்வைத்தியர்களின் கடமையென்று சென்னைநகரிலே சமீபத்தில் 5-வது அகிலஇந்திய பல்வைத்திய மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய சென்னை அரசாங்க வைத்தியமந்திரி டக்றர் தி. செ. சௌ. ராஜன் அவர்கள் வற்புறுத்தினர். மேலும்அவர் பேசியதன் சாரமாவது: தேகசுகத்துக்குப் பற்களைப் பாதுகாப்பது அத்தியாவசியம். பற்களைச்சுத்தமாகவைத்திருப்பது எல்லோருடையவும்முதற்கடமை. பற்கள் அழகாக, சுத்தமாக இருக்கவேண்டுமென்பதைப் புராணங்கள் வற்புறுத்துகின்றன. பற்களைப் பாதுகாப்பது ஒரு அலாதிகலை. ஒருபெண் சகலஆங்கலட்சணங்களையும் கொண்டிருந்தபோதிலும் முத்துப்போன்ற பல்வரிசையில்லாவிட்டால்அவள் அழகிஎன்றுகருதப்படமாட்டாள். ஆகையால் நல்லகணவனைப் பெற்று, வாழ்வில்நல்ல ஸ்திதியடைய விரும்பும் எந்தப்பெண்ணும் பற்களை அழகாக, சுத்தமாகவைத்திருப்பது அவசியம். பற்களைச் சுத்தப்படுத்தவும் பாதுகாக்கவும் விஞ்ஞானமுறைப்படி ஒருசீரானமுறையை வகுப்பது பல்வைத்தியர்களின் முதல்கடமை. பற்களைப் பாதுகாக்கும்முறையை நமது பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இதுதாய்மார்களின் கடமை. பற்களைப்பாதுகாக்கும் முறைபற்றித் தற்சமயம் தேசம்முழுவதற்கும் ஒருசீரானதிட்டமில்லாதது வருந்தத்தக்க விஷயம். பற்பொடி தயாரிப்பது தென்னிந்தியாவின் ஒருமுக்கியதொழிலாகவும் சீவனோபாயமாகவும் இருக்கிறது. இந்தப் பற்பொடிகள்அனைத்தும் நல்லமுடிவில் தயாரிக்கப்பட்டவையென்று கூறுவதற்கில்லை. பல்துலக்கும்பிறஷ் விஞ்ஞான முறைப்படி பரிபூரணமானது, சிறந்ததுஎன்றும் கூறுவதற்கில்லை. ஒருரூபாகொடுத்துப் பிறஷ்வாங்குவது நம்நாட்டுமக்களின் சக்திக்கு அப்பாற்பட்டது. பற்பசையும்இவ்வாறே. பிறஷைச் சரியாகச் சுத்தஞ்செய்யத்தெரியாமல் உபயோகிப்பது கெடுதலானது. ஆகையால் பற்களைச் சுத்தப்படுத்த நம்நாட்டுமக்களின் சக்திக்கேற்ற விஞ்ஞானரீதியான நல்லமுறையை வகுப்பதும் தந்தசுத்திக்கலையை மக்களுக்குப் போதிப்பதும் பல்வைத்தியர்கள்கடமை.

பல்வைத்தியம் ஒரு கலை. பல்லைப் பிடுங்குவதை விடுத்து அதைச் சரிப்படுத்த முயற்சிப்பது சிறந்ததென்று நான்நினைக்கிறேன். இதுவிஷயத்தில் பல்வைத்தியர்கள் கவனம்செலுத்தவேண்டும்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தினலும், தேவதாயின் வேண்டுதலினலும், அர்ச். சூசையப்பர் அர்ச். திரேசம்மாள் என்பவர்களின் மன்றாட்டினலும் என் மகனுக்கு வந்தவியாதி நீங்கிப்பூரண சுகம் பெற்றுள்ளான். இவர்களின்நாமம் அகிலமெங்கும் புகழப்படக்கடவது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். C. E.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின்திருஇருதய இரக்கத்தினலும் கன்னியும் தாயுமான பரிசுத்த தேவதாயின் வேண்டுதலினலும், அர்ச். சூசையப்பர், அர்ச். அன்னம்மாள், அர்ச். பேதுருவானவர், அர்ச். ஆசீர்வாதப்பர், அர்ச். திரேசம்மாள், சங். அல்போன்சா சகோதரி என்பவர்களின் உருக்கமான மன்றாட்டினலும் அடியாளின் ஆபத்தான பிரசவவேதனையில் காப்பாற்றப்பட்டுயானும் குழந்தையும் சுகம்பெற்றுள்ளோம். இவர்களின்நாமங்கள் எங்கும் எல்லாராலும் புகழப்படுவதாக P. C.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission premises, Main Street, Jaffna, on Thursday, March 9 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org